பக்கங்கள்: 20

THEEMPUNAL
# தீம்புனல்
வாராந்தப் பத்திரிகை

தீ : 02 | புனல்:45 | 04.03.2023 சனிக்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2054



துணிவுடன் முடிவு எடுக்கும் தலைவர்கள் உருவாக வேண்டும்

சி.அ.யோதிலிங்கம்

பக்கம் 04



போராட்டத்தில் தம் விசுவாசத்தைக் காத்து நின்ற சின்னராசா

வரதன்

பக்கம் 06

# உள்ளூராட்சி மன்றத்தேர்தல்

# இலாப நஷ்ட கணக்கு

வர்மா




உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியடைந்த நிலையில் செலவுக்குப் பணம் இல்லை என அரசாங்கம் கைவிரித்துள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலால் சிலர் இலாபமடைவார்கள். பலர் நஷ்டமடைவார்கள்.

மக்கள் விரும்பாத சில சம்பவங்கள் இலங்கை அரசியலில் அரங்கேறி உள்ளன. கிணறு வெட்ட பூதம் வந்ததுபோல "கோட்டா கோ கோம், மஹிந்த கோ கோம்" கோஷங்களுக்கிடையில் ரணில் விக்கிரமசிங்க அரியணையில் ஏறினார். அரசியல் அடிவருடிகளின் கைங்கரியத்தால் ரணில், பிரதமராகி பின்னர் ஜனாதிபதியானார். அமைச்சுப் பதவி மீது ஆசை கொண்டவர்களினால் ஜனாதிபதியின் கை ஓங்கி உள்ளது. வாழ்வாதாரப் பிரச்சினையால் மக்கள் சொல்லொணாத் துயரை அனுபவிக்கிறார்கள். இதையெல்லாம் கவனத்தில் எடுக்காதவர்கள் புதிய அமைச்சரவைப் பட்டியலைத் தயாரித்துள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடந்தால் வெற்றி நிச்சயம் என எதிர்க் கட்சிகள் நினைக்கின்றன. தேர்தலில் படுதோல்வி கிடைக்கும் என ஆளும் அரசியல்வாதிகள் நன்கு அறிவார்கள். அரசாங்கத்தின் முகத்திரையைக் கிழிப்பதற்கு பொதுமக்கள் தேர்தலை எதிர்பார்க்கிறார்கள். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைக்க முடியாது நடத்தத்தான் வேண்டும். ஆனால், தேர்தலை நடத்துவதற்கு பணம் இல்லை என்பதே முக்கிய காரணமாகும்.

நான்கு வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்பட வேண்டிய உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கடந்த 2018 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. 2022 ஆம் ஆண்டு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சபைகளின் பதவிக்காலம் மேலும் ஒரு வருடத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளதாக வர்த்தமானி அறிவித்தல் விடுத்தார்.

▶ 19

# ரஷ்ய – உக்ரைன்
## யுத்த நிறுத்தத்திற்கு அழைப்பு

வானதி

உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்து ஒரு வருடம் முடிந்துவிட்டது. உக்ரைன் மீதான தாக்குதலில் எதிர்பார்த்த வெற்றியை ரஷ்யாவால் பெறமுடியவில்லை. ஒரு தலைப் பட்சமான போரை நிறுத்துமாறு உலக நாடுகள் விடுத்த வேண்டுகோளை ரஷ்யா கவனத்தில் எடுக்கவில்லை. வெற்றி பெறாமல் உக்ரைனை விட்டு வெளியேறுவதை ரஷ்யா கௌரவப் பிரச்சினையாகக் கருதுகிறது.

ரஷ்யாவுக்கு நேரடியாக ஆதரவளிக்கும் பெலாரஸ், மறைமுக ஆதரவைக் கொடுக்கும் சீனா ஆகிய நாடுகளின் தலைவர்கள் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என விரும்புகின்றனர். ரஷ்யாவின் நெருங்கிய கூட்டாளியான பெலாரஸ்ய ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகாஷென்கோ, சீனப் பிரதமர் ஜி ஜின்பிங் ஆகியோருக்கு இடையே பீஜ்ஜிங்கில் கடந்த புதன்கிழமை நடந்த சந்திப்பில் போர்நிறுத்தம், உக்ரைன் மோதலுக்கு அரசியல் தீர்வைக் கொண்டு வர பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தினர்.



இது அனைத்து நாடுகளின் பிராந்திய ஒருமைப்பாடு மதிக்கப்பட வேண்டும் என்று வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட சீன 12-அம்ச சமாதான திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது. படையெடுப்பிற்குப் பின்னர் ரஷ்யா ஆக்கிரமித்துள்ள பகுதிகளுக்கு என்ன நடக்கும் என்று இந்த முன்மொழிவு கூறவில்லை அல்லது சமாதான முன்னெடுப்புகள் எவ்வாறு தொடர வேண்டும் என்பது பற்றிய விபரங்களைக் கொடுக்கவில்லை, மேலும் அதிக ஆதரவைப் பெறத் தவறிவிட்டது.

சீனா நீண்ட காலமாக லுகாஷென்கோவுடன் நெருங்கிய உறவைக் கொண்டுள்ளது, மேலும் அவர்களின் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து, இரு தலைவர்களும் விவசாயம் முதல் சுங்க அமுலாக்கம் மற்றும் விளையாட்டு வரையிலான பகுதிகளில் ஒத்துழைப்பு ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதை மேற்பார்வையிட்டனர்.

இருப்பினும், பெலாரஸிய தலைவரின் பயணம் ரஷ்ய தலைவர் விளாடிமிர் புடின் மற்றும் அவரது கூட்டாளிகளுடன் பீஜ்ஜிங்கின் உறவுகளின் ஆழத்தை விளக்குகிறது. சீனா மோதலில் நடுநிலை வகிக்கும் கட்சி என்றும், உக்ரேனிய ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியின் அரசாங்கத்துடன் தொடர்புகளைப் பேணி வருவதாகவும் சீனா கூறுகிறது, அவர் பீஜ்ஜிங்கின் ஈடுபாட்டை எச்சரிக்கையுடன் வரவேற்றுள்ளார், ஆனால் வெற்றி என்பது வார்த்தைகளில் அல்ல செயல்களைப் பொறுத்தது.

இருந்த போதிலும், ரஷ்யாவுடன் தனக்கு "வரம்பற்ற நட்பு" இருப்பதாகவும் மாஸ்கோவின் படையெடுப்பை விமர்சிக்க மறுத்துவிட்டதாகவும் சீனா கூறுகிறது. அமெரிக்காவும் நேட்டோவும் மோதலைத் தூண்டி விட்டதாகவும் உக்ரைனுக்கு தற்காப்பு ஆயுதங்களை வழங்குவதன் மூலம் "தீப்பிழம்புகளை" தூண்டிவிட்டதாகவும் குற்றம் சாட்டியுள்ளது, அதே நேரத்தில் ரஷ்யா மற்றும் அதன் இராணுவ முயற்சிக்கு உதவுவதாகக் கருதப்படும் நிறுவனங்களுக்கு எதிராக விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளையும் கண்டிக்கிறது

ரஷ்யாவுடனான வழக்கமான வர்த்தக உறவுகள் என்று அழைக்கப்படுவதை சீனா பராமரித்து வருகிறது, மேலும் வெடிமருந்துகள் மற்றும் பிற போர்த் தளபாடங்களின் பற்றாக்குறை அதிகரித்து வரும் மாஸ்கோவிற்கு இராணுவ உதவியை அனுப்புவது குறித்து பரிசீலிப்பதாக அமெரிக்க அதிகாரிகள் சமீபத்தில் எச்சரித்துள்ளனர். பீஜ்ஜிங் அமெரிக்காவின் குற்றச்சாட்டுகளை ஒரு அவதூறு பிரச்சாரம் என்று கூறியதுடன், அமைதிப் பேச்சுக்களை ஊக்குவிப்பதில் உறுதியாக இருப்பதாகக் கூறியுள்ளது.



லுகாஷென்கோவின் அரசாங்கம் மாஸ்கோவை வலுவாக ஆதரித்தது மற்றும் பெலாரஸின் பிரதேசத்தை ஒரு வருடத்திற்கு முன்பு உக்ரைன் மீதான ஆரம்ப ஆக்கிரமிப்புக்கான களமாக பயன்படுத்த அனுமதித்துள்ளது. ரஷ்யா பெலாரஸில் துருப்புக்கள் மற்றும் ஆயுதங்களைக் கொண்டுள்ளது மற்றும் இரு அண்டை நாடுகளும் கூட்டாளிகளும் கூட்டு இராணுவப் பயிற்சிகளை மேற்கொண்டனர். இந்த நிலைப்பாடு லுகாஷென்கோவை ஐரோப்பாவில் இன்னும் தனிமைப்படுத்தியது, அங்கு அவரது நாடு போரில் அதன் பங்கு மற்றும் உள்நாட்டு எதிர்ப்பின் அடக்குமுறை ஆகிய இரண்டின் மீதும் ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து பொருளாதாரத் தடைகளை எதிர்கொள்கிறது. லுகாஷென்கோ 1994 இல் பதவி உருவாக்கப்பட்டதிலிருந்து பெலாரஸின் ஒரே ஜனாதிபதியாக இருந்து வருகிறார். அவர் 2020 ஆம் ஆண்டு தனது சர்ச்சைக்குரிய மறுதேர்தலுக்கான எதிர்ப்புகளை எதிர்க்கட்சிகளும் மேற்கத்திய நாடுகளும் மோசடியாகக் கருதிய வாக்கெடுப்பில் கொடூரமாக அடக்கினார்.

உக்ரேனியர்களும் ரஷ்யர்களும் பாரம்பரியமாக மார்ச் 1 ஐ வசந்த காலத்தின் தொடக்கமாகக் குறிக்கின்றனர். ஏற்கெனவே, உறைந்த நிலம் முன்பக்கத்தில் உருகி, கருப்பு சேற்றை உறிஞ்சும் பருவத்தில் - உக்ரேனிய மொழியில் "பெஸ்டோரிஜ்ஜியா", ரஷ்ய மொழியில் "ரஸ்புடிட்சா" - இது இராணுவ வரலாற்றில் தாக்குதல் படைகளை அழிப்பதில் பெயர்பெற்றது.

"குளிர்காலம் முடிந்துவிட்டது. இது மிகவும் கடினமான ஒன்றாக இருந்தது, ஒவ்வொரு உக்ரேனியரும் மிகைப்படுத்தாமல், சிரமங்களை உணர்ந்தனர்," என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி தனது இரவு வீடியோ செய்தியில், ஆற்றல் பிரச்சினைகளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு கூட்டத்திற்குப் பிறகு வழங்கினார்.

"ஆனால், நாங்கள் உக்ரைனுக்கு ஆற்றல் மற்றும் வெப்பத்தை வழங்க முடிந்தது. ஆற்றல் அமைப்புக்கு அச்சுறுத்தல் உள்ளது. மேலும் ஆற்றல் அமைப்பு தொடர்ந்து செயல்படுவதை உறுதி செய்வதற்கான பணிகள் தொடர்கின்றன" என்று ஜெலென்ஸ்கி கூறினார்.

உக்ரைன் குடிமக்களின் மன உறுதியை அழிக்க ஒரு கணக்கிடப்பட்ட உத்தி என்று கூறியதில் ரஷ்யா மின் நிலையங்கள் மீது ஏவுகணைத் தாக்குதல்களின் வழக்கமான அலைகளை ஏற்றியது.

உக்ரேனும் அதன் மேற்கத்திய நட்பு நாடுகளும் ரஷ்யாவின் போரை அதன் ஐரோப்பிய-சார்ந்த அண்டை நாட்டை நசுக்கும் நோக்கத்துடன் தூண்டப்படாதது என்று விபரிக்கிறது, ரஷ்யாவைப் போலவே மாஸ்கோ-ஆதிக்கம் செலுத்திய சோவியத் யூனியனின் ஒரு பகுதியாக 1991 முறிவுவரை இருந்தது. பாதுகாப்பு அச்சுறுத்தல்களை அகற்றுவதற்காக மேற்கத்திய நாடுகளின் "சிறப்பு இராணுவ நடவடிக்கை" என்று அழைக்கப்படுவதைத் தூண்டிவிடுவதாகவும் கீவ் அரசாங்கத்தை ஆயுதங்களுடன் ஆதரிப்பதன் மூலம் மோதலை நீடிப்பதாகவும் ரஷ்யா குற்றம் சாட்டுகிறது. ■

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542
www.theempunal.com
news@theempunal.com

தீம்புனல் THEEMPUNAL

# தொடர் போராட்டங்களை கண்டு கொள்ளாத அரசாங்கம்

அரசாங்கம் அமுல்படுத்தியுள்ள வரிக்கொள்கைக்கு எதிராக தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து நேற்று வெள்ளிக்கிழமை [3] ஆர்ப்பாட்டம் நடத்திய ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி செயலகத்தை நோக்கி பேரணியாக செல்ல முற்பட்டபோது, பொலிஸார் அதற்கு அனுமதிக்கவில்லை, பின்னர் குழுவினர் ஜனாதிபதி மாளிகைக்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அரசாங்கத்தின் தன்னிச்சையான அடக்குமுறை கொண்ட வரிக்கொள்கைக்கு எதிராகவும் வைத்தியசாலைகளில் மருந்து மற்றும் உபகரணங்களுக்கான தட்டுப்பாட்டை உடனடியாக தீர்க்கவேண்டும் எனக் கோரி தொடர்ச்சியாக போராட்டங்கள் நடைபெறுகின்றன. “கறுப்பு வாரம்” என்ற பெயரின் போராட்டங்கள் நடைபெறுகின்றன.

“நாடு முழுவதும் தொழிற்சங்கங்கள் நடத்தும் போராட்டங்கள், வேலை நிறுத்தம் ஆகியவற்றுக்கு பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் ஒன்றியம் ஆதரவளிக்கும்” என அறிவிக்கப்பட்டுள்ளது. மார்ச் மீண்டும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதற்கு சில தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

பெற்றோலியம், மின்சாரம், துறைமுகங்கள், நீர் வழங்கல், சுகாதாரம், கல்வி மற்றும் வங்கித் துறைகளைச் சேர்ந்த பல தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் பங்கேற்கவுள்ளன.

அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய வரித் திருத்தத்திற்கு எதிராக பல தொழிற்சங்கங்களால் ஆரம்பத்தில் வேலைநிறுத்தப் போராட்டம் ஒன்று முன் னெடுக்கப்பட்டிருந்தது.

போராட்டம் வேலை நிறுத்தம் ஆகியவற்றினால் பொதுமக்களின் அத்தியாவசிய தேவைகள் முடக்கப்படுகின்றன. வைத்தியசாலை, பாடசாலை, வங்கி, பெற்றோலியம், துறைமுகம் ஆகியன போராட்டங்களில் ஈடுபட்டதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

இலங்கை துறைமுக அதிகார சபை (SLPA), இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் (CPC), இலங்கை மின்சாரசபை (CEB), தேசியநீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை (NWSDB), இலங்கை மத்திய வங்கி (CBSL), அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் (GMOA) ஆகியவற்றின் தொழிற்சங்கங்கள், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பு (FUTA), இலங்கை வங்கி ஊழியர்சங்கம் (CBEU) மற்றும் இலங்கை ஆசிரியர் சங்கம் (CTU) ஆகியவை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டன. துறைமுகங்கள், விமான நிலையங்கள், எரிபொருள் நிரப்பு நிலையங்கள், பள்ளிகள், வங்கிகள் மற்றும் மருத்துவ மனைகளில் செயல்பாடுகள் பாதிக்கப்பட்டன. வரிக்கொள்கையை அரசு திரும்பப் பெறாவிட்டால், வரும் நாட்களில் கடுமையான நடவடிக்கைகளுடன் வேலை நிறுத்தம் தொடரும் என தொழிற்சங்கங்கள் எச்சரித்தன.

தொழிற்சங்கங்கள் இந்த நடவடிக்கை வெற்றியடைந்ததாக அறிவித்தாலும் அரசாங்கத்துடன் தொடர்புடைய அல்லது பிரதிநிதித்துவப்படுத்தும் சிலர் அது தோல்வியடைந்ததாகக் கூறினர்.

தொழிற்சங்க பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னபிரிய ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், வேலைநிறுத்தத்தில் ஒற்றுமை இல்லை என்றும் கோரிக்கைகளில் பெரிய முரண்பாடுகள் இருப்பதாகவும் தெரிவித்தார்.

ஒரு சில துறைகள் மட்டுமே வேலை நிறுத்தத்தில் பங்கேற்றதாகவும் போராட்டத்தை தொடங்கிய தொழிற்சங்கங்கள் சில அரசியல் கட்சிகளின் தேவைகளை நிறைவேற்றுவதாகவும் அவர் கூறினார்.

போராட்டங்கள் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு இடைஞ்சலாக இருக்கக்கூடாது. போராட்டங்களை முடிவுக்குக் கொண்டுவர அரசாங்கம் முன்வர வேண்டும். ■

# கச்சதீவு ஆலய உற்சவம்

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. கச்சதீவுக்கான படகுச்சேவை குறிக்கட்டுவானில் இருந்து காலை 6 மணி முதல் முற்பகல் 11மணி வரை நடைபெற்றது.

இலங்கையில் இருந்து 4500 பேரும் இந்தியாவில் இருந்து 3500 பேரும் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டது.










# துணிவுடன் முடிவு எடுக்கும் தலைவர்கள் உருவாக வேண்டும்



சி.அ.யோதிலிங்கம்

அரசியல் ஆய்வாளர்கள் எதிர்பார்த்தது போலவே உள்ளூராட்சி சபைத் தேர்தல் திகதி குறிப்பிடப்படாது பிற்போடப்பட்டுள்ளது. தேர்தலுக்கான உரிய நிதியை அரசாங்கம் வழங்காததே பிற்போட்டமைக்கான காரணமாகும். ஜனாதிபதி இதற்காக கூறும் காரணங்கள் சிறுவர்கள் விளையாட்டில் ஈடுபடும் போது தோல்வியை ஒப்புக்கொள்ளாது அடம்பிடிக்கும் செயல் போன்றது. தேர்தலுக்கு வழங்க நிதியில்லை என்பதை மட்டும் ஆதாரங்களோடு கூறியிருந்தால் அதில் சில நியாயத் தன்மைகள் இருக்கிறது என ஏற்றுக்கொள்ளலாம். இதற்கு மாறாக தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களிடம் இணக்கப்பாடு இருக்கவில்லை. 21 ஆவது திருத்தம் வந்த பின்னர் புதிய தேர்தல் ஆணைக்குழு உருவாக்கப்பட்டு அதுதான் தேர்தலை முடிவு செய்ய வேண்டும் என்றெல்லாம் கூறியமை நிதி வழங்காமைக்கான காரணங்களை மலினப்படுத்தியுள்ளது.

உண்மையில் ஜனாதிபதி நிதி வழங்காமைக்கான காரணம் தோல்வி பற்றிய அச்சம்தான். நல்லாட்சிக்கால அனுபவம் அவருக்கு பாடங்களைப் புகட்டியிருக்கலாம். 2015 ஆம் ஆண்டு தோல்வியுற்ற ராஜபக்ஷாக்கள் கூட்டுறவுச்சங்கம் தேர்தல்கள் மூலம் தமது முதலாவது எழுச்சியைக் காட்டினர். பின்னர் இடம்பெற்ற உள்ளூராட்சிச்சபைத் தேர்தல்களுடன் அவர்களது எழுச்சி உறுதியானது. அன்று நல்லாட்சிக்காரர்களுக்கு ஏற்பட்டவை தனக்கும் மொட்டுக்கும் ஏற்படலாம் என ஜனாதிபதி கருதியிருக்கக் கூடும்.

தேர்தல் நடைபெற்றால் மொட்டுக்கட்சி மிக மோசமாக வீழ்ச்சியடையும். ஐக்கியதேசியக் கட்சியும் பெரியளவிற்கு சோபிக்கப்போவதில்லை. அவ்வாறு நடந்தால் மக்கள் ஆணை ஆட்சியாளர்களுக்கு இல்லை என்ற பிரச்சாரம் முன்னெடுக்கப்படலாம். அது சகல தளங்களிலும் ஜனாதிபதியை பலவீனப்படுத்தும். தவிர இந்தத் தடவை ஜே.வி.பி மேல்நிலைக்கு வருமென ஒரு கருத்துக்கணிப்பு இருக்கிறது. முன்னர் 15 வீதத்திற்கும் 20 வீதத்திற்கும் இடையில் இருந்த ஜே.வி.பி இன் வாக்கு வங்கி இந்தத் தடவை 60 வீதமாக உயரும் என அக்கருத்துக் கணிப்பு கூறுகிறது. இதை ஜனாதிபதியோ, ஜனாதிபதிக்குப் பின்னால் நிற்கின்ற அமெரிக்க இந்தியக் கூட்டோ ஒருபோதும் விரும்பப்போவதில்லை. ஜே.வி.பிக்கு சீனா ஆதரவாக உள்ளது என்றும் ஒரு கதை அடிபடுகின்றது. தற்போது போராட்டங்களை நடத்தும் தொழிற்சங்கங்களுக்கு பின்னாலும் சீனா நிற்கின்றது என்ற செய்தியும் உண்டு. எனவே ஜே.வி.பி இன் எழுச்சி சீனாவின் ஆதிக்கத்தை இலங்கையில் உருவாக்கும் என்றும் இந்த இந்தோ-பசுபிக் மூலோபாயக்காரர்கள் அஞ்சலாம். எனவே, தேர்தலை நடத்தவிடாமல் தடுத்தல் என்பது ஜனாதிபதி மொட்டுக்கட்சி இந்தோ-பசுபிக் மூலோபாயக்காரர்கள் ஆகிய மூன்று தரப்புக்களின் கூட்டுமுயற்சியாக இருக்கலாம்.

உண்மையில் நுணுக்கமாகப் பார்த்ததால் தேர்தலைத் தடுத்தமை என்பது ஜனநாயக அடிப்படைகளை இல்லாமல் செய்யும் ஒரு முயற்சி என்றே கூறலாம். இங்கு சட்டம், ஒழுங்கு மட்டுமல்ல அரசுகள் நீண்டகாலமாக பின்பற்றிவந்த அரசியல் மரபுகளும் மீறப்படுகின்றன. சட்ட ஒழுங்குகளை மீறுதல் என்பது இவ்வளவு காலமும் தமிழ்மக்களது விவகாரங்களிலேயே இடம்பெற்றது. சோல்பரி யாப்பின் 29 ஆவது பிரிவு தொடக்கம்இ 13 ஆவது திருத்தம் ஊடாக நீதிமன்றக் கட்டளையை முல்லைத்தீவு குருந்தூர் மலையில் மீறுதல் வரை தமிழ் மக்களுக்கு நிறையவே இவ்விடயத்தில் அனுபவம் இருக்கிறது. ஆனால், தென்னிலங்கை மக்கள் இப்போதுதான் இவ் அனுபவத்தை பெற்றுக்கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

அரசின் நிதி அதிகாரம் பாராளுமன்றத்திடமே இருக்கின்றது. வரவுசெலவுத் திட்டத்தில் நிதிகளை ஒதுக்குவதும் நிதி செலவிடுவதை கண்காணிப்பதும் பாராளுமன்றம்தான். இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சர்களையும் அதிகாரிகளையும் கேள்விகேட்கும் உரிமை பாராளுமன்றத்திற்கு உண்டு. இது தொடர்பாக எதிர்க்கட்சிகள் நிதி அமைச்சின் செயலாளரை பாராளுமன்றத்திற்கு அழைக்குமாறும் அவசர விவாதத்தை இவ்விடயத்தில் நடத்துமாறும் சபாநாயகரை வேண்டியிருந்தனர். ஆரம்பத்தில் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி ஆலோசிக்கலாம் எனக் கூறினாலும் தற்போது பின்வாங்கும் நிலையே ஏற்பட்டுள்ளது. இது சபாநாயகரின் நடுநிலைத் தன்மையையும் கேள்விக்குள்ளாக்கலாம்.

தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமையினால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் தேர்தலில்போட்டியிடும் அரச உத்தியோகத்தர்கள்தான். அவர்கள் இப்போது தேர்தலும் இல்லாமல் மாதாந்த வேதனமும் இல்லாமல் பரிதவிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஒரு மாதம் வேதனம் இல்லை என்றாலே நடுத்தரவர்க்க குடும்பங்கள் நெருக்கடிக்குள்ளாகும். தொடர்ந்து மூன்று நான்கு மாதங்கள் வேதனம் இல்லாமல் இருப்பது தற்போதைய பொருளாதார சூழலில் அவர்களின் நிலையை அதிகம் கடினமாக்கும். சிலர் மனைவி, மக்களுக்குச் சொல்லாமலேயே பதவிகளைத் தற்காலிகமாக இராஜினாமா செய்து வேட்பாளர் பட்டியலில் சேர்ந்தனர். அவர்களின் நிலைதான் பரிதாபத்தில் பரிதாபம். வேட்பாளராக நிற்கும் கட்டுரையாளரின் நண்பர் ஒருவர் “மனைவிக்கு என்ன சொல்வது எனத் தெரியவில்லை” எனக் கூறியிருந்தார்.

தமிழ்ச்சூழலைப்பொறுத்தவரை இத்தேர்தல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பிளவுகளை ஏற்படுத்தியதைவிட எதையும் சாதிக்கவில்லை. ஜனாதிபதிக்கு இதுவும் ஒரு வெற்றிதான். தேர்தல் வந்தபடியால் தென்னிலங்கையில் எதிர்க்கட்சிகளும் உடைந்துபோயிருக்கின்றன. கூட்டமைப்பும் உடைந்துபோயிருக்கின்றது. கூட்டமைப்பின் உடைவு கட்சிகள் பகிரங்கத்தில் ஒருவர்மீது ஒருவர் வசைமாரி பொழிவதற்கும் களங்களைத் திறந்துவிட்டிருக்கிறது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை உள்ளூராட்சி சபைத் தேர்தல் மிகவும் முக்கியமானது. மாகாண சபைகளும் செயற்படாத நிலையில் தமிழ் மக்களின் ஆளுகையின் கீழ் இருக்கும் ஒரேயொரு அரசியல் நிர்வாகம் உள்ளூராட்சி சபைகள்தான். மாகாண சபைகளைவிட உள்ளூராட்சி சபைகளுக்கு சுயாதீனம் அதிகம். தனது எல்லைக்குள் சற்று சுதந்திரமாகச் செயற்படக்கூடியநிலை அதற்கு உண்டு. மரத்தில் கயிறுமூலம் கட்டிவிட்டாலும் கயிற்றின் நீளம்வரை சுதந்திரமாக மேயக்கூடிய நிலை உண்டு. மாகாண சபைகள் அவ்வாறில்லை. அங்கு மாடுகளுக்கு கயிறுகள் பெரிதாகக் கட்டப்படவில்லை. ஆனால், மேய்வதற்குத்தான் ஏகப்பட்ட தடைகள்.

எனவே, சிங்கள மக்களைவிட தமிழ் மக்களுக்கு உள்ளூராட்சி சபைகள் மிகமிக அவசியம். தமிழ்ப் பிரதேச உள்ளூராட்சி சபைகள் தமது கடமைகளை ஒழுங்காக செய்தனவா? என்பது வேறுகதை.

எனினும் யாழ்ப்பாண மாநகரசபை, வலிகாமம் கிழக்கு உள்ளூராட்சி சபை போன்றன விதிவிலக்காக இருந்தன எனலாம். மணிவண்ணனின் ஆட்சிக்காலத்தில் இரண்டு வகைகளில் யாழ்ப்பாணம் மாநகரசபை முக்கியத்துவம் பெற்றிருந்தது. ஒன்று மாநகரசபை சட்ட விதிகளுக்கு பொருள்கோடலை வழங்குவதன் மூலம் அது பல அதிகாரங்களை தன் வசமாக்கியிருந்தது. கொழும்பு மாநகரசபை மாநகர காவல்படையை உருவாக்கியதுபோல மணிவண்ணனும் உருவாக்கியிருந்தார். இதன் காரணமாக கைதுசெய்யப்பட்டு நீதிமன்றம்வரை செல்ல வேண்டியிருந்தது. இறுதியில் வெற்றி மணிவண்ணனுக்கே கிடைத்தது.

இரண்டாவது சமூக முதலீடுகளைப் பெற்றுக் கொள்வதாகும். சமூக முதலீடுகள் மூலம் ஆரியகுளத்தை அழகுபடுத்த மணிவண்ணனால் முடிந்தது. நல்லூர் இராசதானியுடன் தொடர்புபட்ட தொல்லியல் பிரதேசங்களை பாதுகாக்க முடிந்தது. நாகவிகாரை பௌத்த பிக்குவின் அழுத்தங்களையும் சமாளிக்க முடிந்தது. அரசியல் என்பது மூலோபாயத்தை மட்டுமல்ல தந்திரோபாயத்தை உள்ளடக்கியது என்பதை மணிவண்ணன் நிறுவியிருந்திருந்தார். மணிவண்ணன் தொடர்ந்து அதிகாரத்தில் இருந்திருந்தால் யாழ்ப்பாண கலாசார மண்டபம் அரசின் கைகளில் செல்வதையும் தடுத்திருக்க முடியும் என்ற கருத்தும் உண்டு.

இரண்டாவது வலிகாமம் கிழக்கு பிரதேசசபைத் தவிசாளர் தியாகராசா நிரோஸின் செயற்பாடுகளாகும். உள்ளூராட்சிச்சபைகளின் அதிகாரத்தை பிரயோகிக்க அவர் என்றும் தயங்கியதில்லை. அரசு சார்புக் கட்சியைச் சேர்ந்த அங்கஜன் இராமநாதன் பிரதேச சபையின் அனுமதியில்லாமல் பெயர் பலகையை நாட்டியபோது தவிசாளர் அதனைப் பிடுங்கியெறிந்தார்.

நிலாவரையில் தொல்லியல் ஆய்வு செய்ய முற்பட்டபோதும் புத்தர்சிலையை நிறுவ முயன்றபோதும் தனக்குரிய அதிகாரங்களைக் கொண்டு அதனையும் தடுத்திருந்தார். இந்த இரு உள்ளூராட்சித் தலைவர்களுக்கும் ஏற்பட்ட துணிவு ஏனைய உள்ளூராட்சித் தலை வர்களுக்கும் வரவேண்டும்.

தமிழ்ப் பிரதேச உள்ளூராட்சிச் செயற்பாட்டில் கவலைக்குரிய விடயம் கட்சி அரசியல் காரணமாக சபைகளின் செயற்பாடு முடங்கிப்போவதாகும். தேர்தலின்போது கட்சி அரசியல் இருக்கலாம். போட்டித்தன்மையுடன் அங்கு செயற்படலாம். ஆனால், சபைகள் அமைக்கப்பட்ட தமிழ் மக்களின் சபை என்ற பொறுப்புணர்வு தமிழ்க் கட்சிகளுக்கு வரவேண்டும். வரவுசெலவுத்திட்டத்தை அடிக்கடி தோற்கடிக்க வைப்பதன் மூலமும் வேறு தடங்கல்களை உருவாக்குவதன்மூலமும் தமிழ் மக்களுக்குரிய அரசியல் நிர்வாகத்தையே இவர்கள் பலவீனப்படுத்துகின்றனர். உள்ளூராட்சி சபைகள் தேசநிர்மாணத்துக்குரிய ஒருகருவி. அதனைப் பலவீனப்படுத்துவதென்பது தேசத்தின் இருப்பை பலவீனப்படுத்துவதற்கு சமன். எனவே, உள்ளூராட்சி சபைகளை செயற்படவிடாது தடுப்பவர்களை தமிழ்த் தேச விரோதிகள் என்றே கூறவேண்டும்.

தற்போதைய தேர்தல்முறை பெரும்பான்மை பலமற்ற உள்ளூராட்சி சபைகளை உருவாக்குகின்றது என்பது உண்மைதான். அதனை ஒரு கருவியாகப் பயன்படுத்தி உள்ளூராட்சி சபைகளை முடக்க தமிழ்த் தரப்பே முனையக்கூடாது. கட்சி அரசியலை சபைகளுக்கு வெளியில் வைத்துக் கொள்வது நல்லது.

எதிர்காலத்தில் இந்தக்குழப்பங்கள் இல்லாமல் தமிழ்ப் பிரதேச உள்ளூராட்சிசபைகள் சிறப்பாக செயற்படுவதற்கான வழிவகைகளைக்கண்டுபிடிப்பது அவசியம். சபைகளுக்கு வெளியே ஒவ்வொரு சபைகளுக்கும் கல்வியாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், மதத் தலைவர்கள் அடங்கிய ஆலோசனைக் குழுக்களை உருவாக்கி குழப்பங்களை தடுக்க முயற்சிக்கலாம்.

இக் குழுக்களின் ஆலோசனையின்படி சபை செயற்பாடுகளை முன்னெடுப்பதுடன் சபைக்குள் கட்சி முரண்பாடுகள் வரும்போது இவ் ஆலோசனைக் குழுக்களின் உதவியுடன் அவற்றை தீர்ப்பதற்கு முயற்சிக்கலாம்.

இவ்வாறான குழுக்கள் அமைப்பது சபைகளின் செயற்பாட்டில் மக்களின் பங்கேற்பையும் ஊக்குவிப்பதாக அமையும். சமூக முதலீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கும் இவ் ஆலோசனைக் குழுக்கள் உதவிகளை வழங்கக்கூடியதாக இருக்கும்.

பொதுவான கணிப்பு தமிழ்ப்பிரதேச உள்ளூராட்சி சபைகள் தாம் ஆற்றக்கூடிய பணிகளையும் போதுமானளவு ஆற்றவில்லை என்பதுதான்.

எனது நண்பன் ஒருவன் கூறினான் “உள்ளூராட்சி சபைகளையே நடாத்த முடியாதவர்களுக்கு எதற்கு சமஷ்டியும் தனிநாடும்”

நண்பனின் கூற்று அசட்டைக்குரிய ஒன்றல்ல. தமிழ்த் தேசிய சக்திகளுக்கு இது கொஞ்சம் உறைத்தால் நல்லது ■

# சோதனை மேல் சோதனை 13 இற்கு வந்த சோதனை

அவதானி

ஆறறிவு படைத்த மனிதர்களில் பலர் 13 ஆம் இலக்கத்தை துரதிஷ்டமானது எனக் கருதுவார்கள். சில வெளிநாடுகளில் இருக்கும் உல்லாசப் பயணிகள் விடுதியில் 13 ஆம் இலக்க அறையும் இல்லை.

சில நாடுகளில் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமைகளில் வந்தால், அதனை கறுப்பு வெள்ளி என நம்பிக்கொண்டு வேலைக்குச் செல்வதைத் தவிர்த்து விடுபவர்கள் பற்றியும் அறிந்திருக்கின்றோம்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டம் கடந்த 1987 ஆம் ஆண்டு முதல் இற்றைவரையில் இலங்கை அரசியல் அரங்கில் தொடர்ந்தும் விவாதிக்கப்படும் பேசும் பொருளாகியிருக்கிறதே தவிர, உருப்படியாக எதுவும் நடந்திருப்பதாகத் தெரியவில்லை. இந்த இலட்சணத்தில் 13 + (பதின்மூன்று பிளஸ்) என்றும் பேசினார்.

இந்தப்பதிவில் இடம்பெறும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க படத்தை எமது வாசகர்கள் எத்தனை தடவைதான் பார்த்திருப்பார்கள். இதில்

ஆனால், அதனைப்பற்றி பேசிய பலரும் சலிப்பின்றி அரசியல் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

கடந்த 36 வருட காலத்திற்குள் இலங்கை அரசியலில் பல மாற்றங்கள் நேர்ந்துவிட்டன. அவ்வாறு மாற்றங்கள் நிகழும்போதெல்லாம் எமது அனைத்து அரசியல் தலைவர்களும் கையில் தூக்கிப்பிடித்துப் பேசுவது இந்த 13 ஆவது திருத்தச் சட்டத்தைத்தான்.

அன்று வடக்கும் - கிழக்கும் இணைந்த மாகாண சபை திருகோணமலையை தலைமையகமாக வைத்து இயங்கத்தொடங்கியது. அந்த ஒப்பந்தத்தை கடுமையாக எதிர்த்தவரான பின்னர் வந்த ஜனாதிபதி பதவிக்கு வந்த ரணசிங்க பிரேமதாச, விடுதலைப்புலிகளை My Boys என விளித்து, வரவேற்று கொழும்பில் உல்லாசப்பயணிகள் விடுதியில் தங்க வைத்து உபசரித்து, பணமும் ஆயுதங்களும் வழங்கி ஆதரித்து தனது வழிக்கு இழுக்க முனைந்தார்.

இறுதியில் அவர் 1993 ஆண்டு மே மாதம் 01 ஆம் திகதி கொழும்பில் நடந்த மேதின ஊர்வலத்

தனித்தனிக் கலாசாரம்,மொழி அடையாளங்களை ஒவ்வொரு இனமும் கொண்டுள்ளதென்பதை ஏற்றுக்கொள்ளல்,

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் அங்கு ஏனைய இனக்குழுக்களுடன் எல்லாக் காலத்திலும் ஒன்றாக வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுப்பூர்வமான வசிப்பிடங்கள் என்பதை அங்கீகரித்தல்.

இலங்கையின் ஐக்கியம், இறைமை, பிரதேச ஒருமைப்பாடு ஆகிய அம்சங்களைப் பலப்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த சகல பிரஜைகளும் சமத்துவமாகவும் பாதுகாப்பாகவும் ஒற்றுமையாகவும் சுபீட்சத்துடன் தங்கள் அபிலாசைகளை நிறைவேற்றி வாழும் பல இன, பல மொழி பேசும் பல மதங்களைக் கடைப்பிடிக்கும் தன்மையைப் பேணுதல் முதலான தீர்மானங்களுடன், கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தில் மேலதிக உடன்படிக்கைகளும் இருந்தன.

வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண சபை முறைமை இல்லாது ஒழிக்கப்பட்டது.



இடம்பெற்றுள்ள இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன, அமைச்சர்கள் காமினி திசாநாயக்க, ஏ.ஸி.எஸ்.ஹமீத் இந்திய வெளிவிவகார அமைச்சர் நரசிம்மராவ், ஜே.ஆரின் சகோதரர் எச்.டபிள்யூ.ஜெயவர்தன ஆகியோர் தற்போது உயிரோடு இல்லை.

இந்த ஒப்பந்தத்தை அன்று எதிர்த்த ரணசிங்க பிரேமதாசவும் இன்றில்லை. இவர்கள் மட்டுமன்றி, சுதுமலையில் அப்போது மக்கள் முன்தோன்றி ஆயுதங்களை கீழே வைப்பதாகச் சொன்ன வேலுப்பிள்ளை பிரபாகரனும் கேர்ணல் கிட்டுவும் மற்றும் ஒரு தரப்பிலிருந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப் செயலாளர் நாயகம் பத்மநாபாவும் தமிழ்த்தலைவர்கள் அமிர்தலிங்கமும் யோகேஸ்வரனும் இன்றில்லை.

இந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 29 ஆம் திகதி வந்தால், இலங்கை -இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 36 வருடங்களாகின்றன.

1987 ஆம் ஆண்டு பிறந்த தமிழ் - சிங்கள - முஸ்லிம் குழந்தைகளும் வளர்ந்து படித்து வேலை வாய்ப்பு பெற்று மணம் முடித்து பிள்ளைகளும் பெற்றுவிட்டனர்.

ஆனால், அன்று பிறந்த ஒப்பந்தம் இன்றும் அந்த இடத்திலேயே தவித்துக்கொண்டு நிற்கிறது.

தில் ஒரு தற்கொலைதாரியினால் கொல்லப்பட்டார்.

அதற்கு முன்னர் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி தமிழ்நாடு ஸ்ரீபெரும்புதூரில் நடந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தின்போது மற்றும் ஒரு தற்கொலை குண்டுதாரியினால் ராஜீவ் காந்தியும் கொல்லப்பட்டார்.

ஜே.ஆர்.ஜெயவர்தன மேற்குறிப்பிட்ட இருவருக்கும் பின்னர் 1996 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 01 ஆம் திகதி இயற்கையாகவே மரணம் எய்தினார்.

இவ்வளவுபேரும் அந்த இலங்கை - இந்திய ஒப்பந்தத்துடன் சம்பந்தப்பட்டிருந்தவர்கள்தான். அன்று அதனை ஆதரித்தவர்களும் தற்போது இல்லை, எதிர்த்தவர்களும் தற்போது இல்லை.

ஆனால், ஏட்டில் எழுதப்பட்டு அரசியல் சட்டத்தில் இணைக்கப்பட்ட அந்த 13 ஆவது திருத்தம் மாத்திரம் ஏட்டுச்சுரக்காய் போன்று இன்னமும் வாழ்ந்துகொண்டிருக்கிறது.

பதினெட்டுக்கும் மேற்பட்ட பிரிவுகள் - உப பிரிவுகள் கொண்ட இந்த ஒப்பந்தத்தின் சாராம்சம் இதுதான்:

இலங்கையின் ஐக்கியம், இறைமை, பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பேணிக்காத்தல்.

இலங்கை, சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் ஆகியோரைக் கொண்ட பல்லின, பன்மொழி சமூகங்கள் வாழும் நாடு என்பதை ஏற்றல்.

கவனமாகப் பேணிக் காப்பாற்ற வேண்டிய

பின்னர் ஒன்பது மாகாணங்களுக்கும் தேர்தல்கள் நடந்து மாகாண சபைகள் இயங்கின. அவற்றுக்கு ஆளுநர்களும் நியமனமானார்கள்.

கலைக்கப்பட்ட இந்த மாகாண சபைகளுக்கான தேர்தலும் நீண்டகாலமாக நடைபெறவில்லை. வடக்கின் முதல்வர் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் பெற்றுவிட்டார். கிழக்கு முதல்வர் அமைச்சராகிவிட்டார்.

பின்கதவால் பாராளுமன்றம் வந்து, தற்போது ஜனாதிபதியாகியிருக்கும் ரணில் விக்கிரமசிங்கா, குறிப்பிட்ட 13 ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றுவேன் எனச்சொன்னதும் பௌத்த பிக்குகளும் கடும்போக்காளர்களும் அதனை மூர்க்கத்தனமாக எதிர்க்கத் தொடங்கியுள்ளனர்.

வடக்கிற்கும் கிழக்கிற்கும் பொலிஸ் அதிகாரம், காணி அதிகாரம் வேண்டும் என்று தமிழ்த் தேசியக்கட்சிகள் குரல் எழுப்புகின்றன.

மலையகத் தமிழர்களை கைவிட்டு விடாதீர்கள் என ஒரு திசையிலிருந்து குரல் எழுகிறது.

கிழக்கின் முஸ்லிம்களுக்கு தனி நிருவாக அலகு வேண்டும் என்ற குரலும் ஒலிக்கிறது.

பாவம் அந்த பதின்மூன்று! போக்கிடமின்றி பிறந்த இடத்திலேயே நிற்கிறது. தேர்தல் வாக்குப் பெறுவதற்கு இந்த பதின்மூன்று துருப்புச்சீட்டாகி விட்டது. அதிர்ஷ்டம் கெட்ட 13 இற்கு பெயர்ச்சியோ - விமோசனமோ இல்லையா...? ■

# போராட்டத்தில் தம் விசுவாசத்தைக் காத்து நின்ற சின்னராசா

வரதன்



இறை விசுவாசம் என்பது நாம் வாழும் முறையில் இணைந்தது என்பது எல்லா மதங்களுக்கும் பொதுவானது.

“அன்பே சிவம்” என்பதைப் போல,

சாப்பிட முதல் உன் அயலவன் உண்டுவிட்டானா என்று பார் என்ற நபிகளின் வாக்கைப் போல,

உன்னைப் போல் உன் அயலானையும் நேசி என்ற இயேசுவின் போதனைக்கு ஏற்ப- தான் வாழ்ந்த சமூகத்தை - நேசித்த ஒருவராக தம் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து தம்மை அர்ப்பணித்தவர் அவர்.

இன்று தமிழ்த் தேசியம், யாழ் நூலக எரிப்பு, தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை, 83 இன அழிப்பு என்று பேசும் பல அரசியல்வாதிகளுக்கு அவரைத் தெரியாததுதான் அதிசயமானது.

தமிழ்த் தேசியப் பாராளுமன்ற உறுப்பினர்களில் செல்வம் அடைக்கலநாதன் மட்டுமே தமது அஞ்சலியைச் செலுத்தி அறிக்கை விட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

1957, 1977, 1981 க்குப் பின் இன அழிப்பின் உச்சமாக அமைந்தது 1983 ஜூலை இன வன்செயல்.

1983 இன் ஜூலை 25 ஆம் திகதி மாலையில் கரவெட்டி முழுவதும் அந்தச் சோகமான செய்தி பரவியது!

ஏற்கெனவே கொழும்பிலிருந்து வந்த பல ‘காயமான’ செய்திகளில் ‘வேலைப்பாய்ச்சியது’ போல அந்தச் செய்தியும் வந்தது

வெலிக்கடையில் இருந்த கைதிகள் படுகொலை செய்யப்பட்டுவிட்டனராம். சின்னராசா சுவாமியுமாம்- என்ற தகவல்தான் அது.

கரவெட்டியிலுள்ள அவர்களது வீட்டில் உறவினரும் அயலவரும் அயலூராரும் குவிந்தனர். மரணவீடாகவே அன்று அது அழுது நிறைந்தது.

வடமராட்சியின் மூத்த ஊடகவியலாளர் தில்லைநாதன் அண்ணர் “ தம்பி, கரவெட்டியில் பரபரப்புச் செய்தி பாதர் சின்னராசா கனடாவில் காலமாகி விட்டாராம் ஆலயத்தில் சோக மணி ஒலிக்கப்பட்டதாம்” என்று சொன்னபோது வந்த நினைவலைகளில் அந்த 83 நாள் நினைவு முக்கியமான ஒன்று.

பாதர் சின்னராசா பாதராக கரவெட்டிக்கு வந்தது. அதற்கு எனது தாயார் வரவேற்புக் கீதம் பழக்கியது.

பாதராக அவரை அந்த உடையில் அடிக்கடி பார்த்தது தொடர்ந்து 83 நினைவுகள் இன்றுவரையாகத் தொடர்ந்தன. அண்மையில் எனது அண்ணனின் மகளின் திருமணத்தை அவர் ஓர் உறவினராகவும் அண்ணாவின் நண்பராகவும் நின்று நடத்தினார்.

சில மாதங்களுக்கு முன் ஒரு சிரேஷ்ட ஊடகவியலாளருடன் எதிர்வரும் ஜூலை மாதம் வெலிக்கடை இனப்படுகொலை நாற்பதாவது ஆண்டை முன்னிட்டு சின்னராசா அவர்களிடமும் ஒரு பேட்டியை ஒழுங்கு செய்யலாம் எனச் சொல்லியிருந்தேன்.

ஆனால், சில தினங்களுக்கு முன், எனது உறவினரும் அவருடைய தந்தையுமான ஜெயக்குமார் அடிகள் சின்னராசா அவர்களின் உடல் நிலை பற்றிய சோகமான தகவலைப் பகிர்ந்தார்.

வெலிக்கடைப் படுகொலையை ஆவணமாக நினைவுபடுத்த இன்று சிலரே நம்மத்தியில் உள்ளனர்.

அவர்களும் போக யாவும் காற்றோடு கலந்த கதையாகப் போய்விடும்.

தில்லை அண்ணர் சின்னராசா பற்றிச் சொன்னதோடு- சின்னராசா எனது தமையனார் சுபேந்திரனின் நல்ல நண்பர் என்பதையும் அவர் குருத்துவப் பட்டம் பெற்று கரவெட்டி வந்தபோது அந்த விழாச் செய்தியைத் தாம் வீரகேசரிக்கு அனுப்பியதையும் நினைவுகூர்ந்தார். இன்றைய ஊடகர்களும் அரசியல்வாதிகளும் அறிவதற்காக இதனைக் குறிப்பிட வேண்டியுள்ளது.

கலாரசிகரான அவரது தந்தையார் பிலிப் சிறந்த ஆர்மோனியக் கலைஞர். கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் நீண்டகாலம் எழுதுவினைஞராகப் பணியாற்றியவர். தேவாலயத்தில் லத்தீன், தமிழ் இரண்டிலும் பாடுவதில் விண்ணர்.

சின்னராசாவுடனும் அந்தக் கலைரசனைகள் விழுதாகத் தொடர்ந்தன. கனடா மக்கள் அதனை அறிவார்கள்.

இலங்கை வானொலியில் பணியாற்றி காணாமல் ஆக்கப்பட்ட குகமூர்த்தி அண்ணர் சின்னராசா சுவாமியுடன் எண்பதுகளில் யாழ்ப்பாணத்தில் பண்ணை உப ஒலிபரப்பு நிலையத்தில் பணியாற்றும் காலத்திலிருந்து பழகியவர்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னாலிருந்த ரூபவாஹினியில் பணியாற்றிய நான் அவரைச் சந்தித்த வேளையில் எனது ஊரைச் சொன்னபோது அவர் என்னிடம் முதற் கேட்ட கேள்வி “பாதர் சின்னராசாவைத் தெரியுமா?” என்பதே.

அவருடனான எனது உறவு முறையைச் சொன்ன பின்னர் குகமூர்த்தி அண்ணனின் நட்பின் நெருக்கம் அதிகரித்தது. அது குகமூர்த்தி அண்ணர் காணாமலாக்கப்பட்டபோது அது தொடர்பாக, நாலாம் மாடி வரையும் என்னையும் விசாரணைக்காகப் போகவும் வைத்தது.

சின்னராசா சுவாமி பற்றிக் குகமூர்த்தி சொன்ன நினைவுகளில் அவர் யாழ் நூலக எரிப்பின்போது பல்கலைக்கழக மாணவர்கள் சிலருடன் சேர்ந்து ஆற்றிய பணிகள் குறிக்கத்தக்கது.

1981 ஆம் ஆண்டு இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் பரப்புரையின் போது இடம்பெற்ற “பொலிஸார் மீதான சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து ஏற்கெனவே திட்டமிட்டபடி தெற்கின் குண்டர்களால் யாழ் நூலகமும் யாழ் நகரமும் எரியூட்டப்பட்டு, தொடர்ந்து ஊரடங்குச் சட்டம் அமுலாகியிருந்த வேளையில் அவர் நூலகத்தில் எரிக்கப்பட்ட முக்கிய ஆவணங்கள் நூல்கள் தொடர்பான விபரங்களையும் யாழ் நகரில் இடம்பெற்ற அனர்த்தங்களையும் ஒரு நூலாகத் தொகுத்து அச்சிட்டு வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் இராஜதந்திரிகளுக்கும் சேரும் வகையில் கொழும்புக்கு அனுப்புவதில் முக்கிய பங்கை ஆற்றினார் என குகமூர்த்தி சொல்லியிருந்தார்.



நீர்வேலி வங்கிக் கொள்ளையில் சின்னராசாவுக்கு தொடர்பிருந்ததோ இல்லையோ அவரது இனநலனுக்கான செயற்பாடுகளே அவர் மீதான கைதுக்கு காரணமாயின. பாதர் சிங்கராயர் தம்மிடம் இளைஞர்கள் தந்த பணத்தைப் பிரித்து தமிழர் உரிமை விடயத்தில் ஆர்வமுள்ளவர்களாகத் தமக்குட்பட்ட நான்கு குருமார்களிடம் கொடுத்து அதனை வங்கிகளில் இட்டு வைக்குமாறு கேட்டிருந்தார்.

**(18 ஆம் பக்கம் பார்க்க...)**

# விற்றமின் மாத்திரைகளை முகத்தில் பூசலாமா?





கண்ணாடி சருமம் வேண்டுமா, பட்டுக்கூந்தல் வேண்டுமா, ஒரே இரவில் சிவப்பாக மாற வேண்டுமா, இப்படி உத்தரவாதங்களுடன் இன்ஸ்டா ரீல்ஸிலும் யூட்டியூப் ஷார்ட்ஸிலும் வாட்ஸப்பிலும் வலம்வரும் அழகுக் குறிப்புகள் எக்கச்சக்கம். கோப்பித் தூளில் ஆரம்பித்துக் கற்றாழை வரை இவற்றில் சொல்லப்படுகிற பொருட்கள் உண்மையிலேயே சரும அழகுக்கும் ஆரோக்கியத்திற்கும் உதவுபவையா? நம்பி உபயோகிக்கலாமா?

விற்றமின் ஈ மாத்திரைகளை உடைத்து முகத்தில் தடவச் சொல்லி நிறைய வீடியோக்கள் வருகின்றன. உள்ளுக்குச் சாப்பிட வேண்டிய இந்த விற்றமின் ஈ மாத்திரைகள் நமது வயிற்றுக்கு ஏற்றி பேலன்ஸ் உடன் தயாரிக்கப்படுபவை. சருமத்துக்கென ஒரு பேலன்ஸ் இருக்கும். வேறுபட்ட பேலன்ஸ் உள்ள விற்றமின் ஈ கேப்ஸ்யூலை உடைத்து உள்ளே இருக்கும் எண்ணெயை முகத்தில் தடவும் போது எரிச்சல்தான் ஏற்படுமே தவிர வேறு எந்தப் பலனும் ஏற்படாது. இதற்கு பதிலாக சரும மருத்துவர்கள் பரிந்துரைக்கும் விற்றமின் சி சீரம் பயன்படுத்தலாம்.

கற்றாழை ஜெல் சிலருக்குத்தான் பலனளிக்கும். சென்சிட்டிவ் சருமம் உள்ளவர்களுக்கு இது எரிச்சலை ஏற்படுத்தி, சருமத்தைச் சிவந்துபோகச் செய்யும். கற்றாழையை அப்படியே பறித்து, ஃப்ரெஷ்ஷாக ஜெல்லை நேரடியாக சருமத்துக்கோ, கூந்தலுக்கோ பயன்படுத்தக்கூடாது. அதன் ஜெல் பகுதியை பலமுறை நல்ல தண்ணீரில் அலசியே பயன்படுத்த வேண்டும். முதல் முறை உபயோகிப்பவர், அலசிய ஜெல்லில் சிறிது எடுத்து, காதின் பின்புறம் தடவி 'பேட்ச் டெஸ்ட்' **(patch test)** செய்து பார்க்க வேண்டும். அது ஏதேனும் ஒவ்வாமையை ஏற்படுத்தினால் பயன்படுத்துவதைத் தவிர்க்கவே இந்த டெஸ்ட். கற்றாழையில் உள்ள குளுக்கோமெனன் **(Glucomannan)** சருமத்தை ஈரப்பதத்துடன் வைத்திருக்கும். அதன் ஆன்டி செப்டிக் தன்மை முகப்பருக்களைப் போக்



க்கூடியது. மருத்துவர்கள் பரிந்துரைக்கும் கற்றாழை ஜெல்லைப் பயன்படுத்துவது பாதுகாப்பானது

கிளிசரின்: எமோலியன்ட்ஸ் **(Emollients)**, ஹியூமக்டன்ட்ஸ் **(Humectants)**, ஆக்லுசிவ்ஸ் **(Occlusives)** என மாய்ஸ்ச்சரைசர் மூன்று வகைப்படும். இதில் கிளிசரின் ஹியூமக்டன்ட்ஸ் வகையைச் சேர்ந்தது. இது நமது சருமத்தின் அடியில் இருக்கும் ஈரப்பதத்தை சருமத்தின் மேல்பகுதிக்குக் கொண்டுவரும். வறண்ட சருமம் உள்ளவர்கள், கிளிசரின் தடவிய பின், எமோலியன்ட்ஸ் உள்ள மோய்ஸ்சரைப் பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் சருமம் ஈரப்பதத்துடன் இருக்கும்.

ரோஸ் வோட்டர் (பன்னீர்): ரோஸ் வோட்டரை டோனராகப் பலர் பயன்படுத்துகிறார்கள். கடைகளில் விற்கப்படும் பெரும்பான்மையான ரோஸ் வாட்டர், எசென்ஸ் சேர்த்தவை. ரோஜாவிலிருந்து இயற்கையாகத் தயாரிக்கப்படுபவை அல்ல. சரும மருத்துவர்களைப் பொறுத்தவரை **CTM** எனப்படும் கிளென்சிங், டோனிங், மாய்ஸ்சரைசிங் முறையைப் பரிந்துரைக்க மாட்டார்கள். எல்லாவிதமான சருமத்திற்கும் சன் ஸ்கிரீன் மற்றும் மாய்ஸ்சரைசர்தான் முக்கியமே தவிர, டோனர் அவசியமில்லை. எண்ணெய்ப் பசை சருமம் உள்ளவர்கள் மட்டும் சரும மருத்துவரின் ஆலோசனையோடு டோனர் பயன்படுத்தலாம்.

ஹென்னா: நரையை மறைக்க ஹென்னா பயன்படுத்தும்போது, அது கூந்தலை வறட்சியாக்கும் வாய்ப்புகள் அதிகம். அதிலும் மருதாணி இலைகளைப் பறித்து அப்படியே அரைத்து நேரடியாகத் தலையில் பயன்படுத்துவது மிகவும் ஆபத்தானது. ஹென்னா பவுடர் பயன்படுத்தும் முன் 'பேட்ச் டெஸ்ட்' மிகவும் அவசியம். கெமிக்கல் கலக்காத ஹென்னாவாகப் பார்த்து பயன்படுத்த வேண்டும். ஹென்னாவுடன் முட்டை, தயிர் ஆகியவற்றைக் கலந்து கண்டிஷனராகப் பயன்படுத்தலாம். ஹென்னா பயன்படுத்தி, தலைக்குக் குளிக்கும்போது அதைச் சுத்தப்படுத்த நிறைய ஷாம்பு அல்லது சீயக்காய் பயன்படுத்த வேண்டியிருக்கும். அது கூந்தலை மேலும் வறட்சியாக்கும். அதே நேரம், கெமிக்கல் கலந்த ஹேர் டையைவிட கெமிக்கல் சேர்க்காத ஹென்னாவைப் பயன்படுத்துவது பாதுகாப்பானது.

கோப்பித் தூள்: கோப்பித் தூளை கண்டிப்பாக சருமத்துக்குப் பயன்படுத்தவே கூடாது. சருமத்தின் இறந்த செல்களை நீக்கும் எக்ஸ்போலியேஷன் **(exfoliation)** முறையில் பிசிக்கல் எக்ஸ்போலியேஷன், கெமிக்கல் எக்ஸ்போலியேஷன் என இரண்டு வகைகள் உண்டு. முதல் வகை, இறந்த செல்களை ஸ்கிரப் பயன்படுத்தி நாமாக நீக்குவது. கெமிக்கல் எக்ஸ்போலியேஷன் என்பது நிபுணர்களால் செய்யப்படவேண்டியது. கோப்பித் தூளைப் பயன்படுத்துவது பிசிக்கல் எக்ஸ்போலியேஷனில் வரும். அதை முகத்தில் ஸ்கிரப் போலப் பயன்படுத்தும்போது, சருமத் துவாரங்கள் பெரிதாகி, தழும்புகள் ஏற்படும்.

கடலை மா: கடலை மாவைத் தயிர் அல்லது பாலாடை கலந்து ஃபேஸ் பேக் மாதிரி போட வேண்டும். அதை 15 நிமிடங்களில் கழுவிவிட வேண்டும். எக்காரணம் கொண்டும் கடலை மாவை ஸ்கிரப் செய்யக்கூடாது. சென்சிட்டிவ் சருமம் மற்றும் பருக்கள் உள்ளவர்கள் கடலை மாவு உபயோகிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

முல்தானி மிட்டி: முல்தானி மிட்டியைப் பருக்கள் இல்லாத, எண்ணெய்ப்பசை சருமம் கொண்டவர்கள்தான் பயன்படுத்த வேண்டும். ஆனால், அதை 15 நிமிடங்களில் கழுவிவிட வேண்டும்.

செம்பருத்தி இலை: செம்பருத்தி இலையை ஹேர் கண்டிஷனராகப் பயன்படுத்தலாம். செம்பருத்தி இலையை அரைத்து, தயிர் கலந்து முடிக்குப் பயன்படுத்தலாம். இது ஹென்னாவைவிடப் பாதுகாப்பானது. ஆனால் பொடுகு இருப்பவர்கள் பயன்படுத்தக்கூடாது.

மஞ்சள்: மஞ்சளில் இருக்கும் குர்க்குமின் புற்றுநோயைத் தடுக்கும் சக்தி கொண்டது என்று பல ஆய்வுகள் கூறியுள்ளன. ஆனால், வெயிலில் செல்லும்போதும் சென்சிட்டிவ் சருமம் உள்ளவர்களும் மஞ்சள் பூசிச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

எலுமிச்சைப் பழம்: எலுமிச்சைப் பழத்தை சருமத்தில் நேரடியாகப் பயன்படுத்துவதை அவசியம் தவிர்க்க வேண்டும். எலுமிச்சைப் பழம் என்பது விற்றமின் சி சீரம் போன்றது அல்ல என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

தேன்: தேனை மோய்ஸ்சரைசர் போன்று பயன்படுத்தலாம். சிலர் முகப்பருவைப் போக்க இதைப் பயன்படுத்துகிறார்கள். அது பலன் தராது. தேனின் தரத்தைப் பொறுத்தே அதன் மோய்ஸ்சரைசிங் தன்மை இருக்கும்.

தயிர்: தயிரில் உள்ள லாக்டிக் அமிலம், பீலிங் தன்மை கொண்டது. இது சருமத்துக்கு எந்த விதமான பாதிப்பையும் ஏற்படுத்தாது.

கண்டதையும் கேட்டதையும் பார்த்ததையும் நம்பி, எல்லாப் பொருட்களையும் சருமத்துக்குப் பயன்படுத்துவது பாதகமான பலன்களையே தரும். சில பொருட்கள் மட்டுமே பக்க விளைவுகள் இல்லாதவை. இயற்கையானவைதானே, சமையலறைப் பொருட்கள்தானே என்று அவற்றைப் பயன்படுத்துவது தவறு. ■

# தெரிந்த சினிமா தெரியாத சங்கதி



59

ரமணி

மிடுக்கான பொலிஸ் அதிகாரி என்றால் கண் முன்னால் கம்பீரமாகக் காட்சியளிப்பவர் எஸ்.பி.சௌத்ரி. தங்கப்பதகத்தில் எஸ்.பி.சௌத்ரியாக வாழ்ந்தவர் நடிகர் திலகம் சிவாஜி. சினிமா வாய்ப்புத் தேடி அலைந்தபோது செந்தாமரை கேட்டதற்கிணங்க வேண்டா வெறுப்பாக எழுதிய கதைதான் தங்கப்பதக்கமாக பெரும் வெற்றி பெற்றது. நாடக உலகில் செந்தாமரை கொடி கட்டிப்பறந்த காலத்தில் மகேந்திரனால் எழுதப்பட்டதுதான் “இரண்டில் ஒன்று” எனும் நாடகம்.




‘தங்கப்பதக்கம்’ படக் கதை பற்றி மகேந்திரன் கூறுகையில், நம்மைச் சுற்றி பல்லாயிரம் கதைகள். என்னுடைய சிறுவயதில், உறவினர் ஒருவருடைய பெயர் என் காதில் விழுந்து கொண்டேயிருக்கும். அவருடைய பெயர் முருகன். சந்தனம் மகன் முருகன் என்று சொல்வார்கள்.

அவர் சிறுவயதில் மிகுந்த சேட்டைக்காரர். ஏதாவது வம்பை இழுத்துக் கொண்டே வீட்டிற்குள் நுழைவார். அவருடைய அப்பாவும் அவரை வெளுத்து வாங்கிவிடுவார். ஊரில் எந்த அசம்பாவிதம் நடந்தாலும் சந்தனம் மகன் முருகன்தான் என்று சொல்லி விடுவார்கள். அப்படியொரு பேரும் புகழும் சிறுவயதில் எங்கள் ஊரில் பெற்றிருந்தார்.

‘சந்தனத்துக்கு புள்ளை பொறந்திருக்கு பாரு, நல்லா பேய்க் கணக்கா’ என்பார்கள். இதுவெல்லாம் அப்பொழுது என் காதில் விழும்.

கழுதை முருகனைக் கண்டாலே ஓட்டமெடுக்கும் நண்பர்களுடன் சேர்ந்து கழுதையின் வாலில் நூலைக் கட்டி, அந்த நூல் முழுவதும் டப்பாக்களைக் கோர்த்து வெடியை வைத்து விட்டால் கழுதை தெறித்து ஓடும். சரி, தவறு என பகுத்து ஆராய முடியாத பருவம். நான் முதன்முதலில் ஒரு கதையை உருவாக்க வேண்டும் என நினைத்த பொழுது எதுவுமே சரிப்பட்டு வரவில்லை. அப்பொழுதுதான் இந்த முருகனின் ஞாபகம் வந்தது. அவரே சூப்பர் கரக்டர். இந்த முரட்டுத்தனமான கரக்டர் வளர்ந்த பிறகு எப்படியிருப்பான்? இவனுக்கு முரண்பாடாக கதாநாயக அந்தஸ்து கொடுக்க நினைத்தேன் என்றார்.

தமிழ்சினிமாவில் முரண்பாடான கதாபாத்திரங்கள் பெரும் வெற்றி பெற்றுள்ளது. தங்கப்பதக்கம் திரைப்படத்தில் தந்தை நேர்மையான அதிகாரியாகவும் மகன் ஒரு திருடனாகவும் கதாபாத்திரங்கள் அமைக்கப்பட்டு பெரும் வெற்றி பெற்றது. இந்தக் கதாபாத்திரங்களின் வெளிப்பாடுதான் ‘அஞ்சாதே’ திரைப்படம் என்று மிஷ்கினே சொல்லியிருக்கிறார்.



“இரண்டில் ஒன்று” என்ற பெயரில் ஐந்து நாட்களில் நாடகத்தை எழுதி முடித்தார், மகேந்திரன். அந்த நாடகம் அரங்கேற்றமானது. எஸ்.பி.சௌத்ரி வேடத்தில் செந்தாமரை நடித்தார். நாடகத்தைப் பார்க்க வந்த சிவாஜி, “சிவாஜி நாடக மன்றம் மூலம் இந்த நாடகத்தை நடத்தலாம், அதில் எஸ்.பி.சௌத்ரியாக நான் நடிக்கிறேன்” என்று கூறினார்.



“இரண்டில் ஒன்று” என்ற பெயர் “தங்கப் பதக்கம்” என்று மாற்றப்பட்டது. சிவாஜி கணேசன், எஸ்.பி.சௌத்ரி நடிக்க, மியுசிக் அகாடமியில் நாடகம் அரங்கேற்றப்பட்டது. 100 ஆவது நாளாக நாடகம் நடந்த போது, மகேந்திரனுக்கு சிவாஜி கணேசன் மோதிரம் அணிவித்தார்.

“தங்கப் பதக்கம்” நாடகத்தை சிவாஜி பிலிம்ஸ் திரைப்படமாக எடுத்தது. கதை-வசனம் மகேந்திரனுடையது. பி.மாதவன் டைரக்ட் செய்தார்.

எஸ்.பி.சௌத்ரி வேடத்தில் சிவாஜி வாழ்ந்து காட்டினார். படம் மகத்தான வெற்றி பெற்றது. இந்தப்படம் தெலுங்கு, கன்னடம், ஹிந்தி ஆகிய மொழிகளிலும் வெளியானது.

அந்த ராஸ்கலை நான் சுட்டுக்கொல்ல வேணும் என உறுதியாகச் சொன்னார். நாடகத்தில் எஸ்.பி.சௌத்ரியின் மகன் இறக்கவில்லை. படத்தில் தகப்பனின் துப்பாக்கிச் சூட்டில் மகன் பலியாகிறார்.

தங்கப்பதக்கம் மாபெரும் வெற்றி தேவைப்பட்டது. அவர்களின் ஆசை ஒரே வருடத்தில் தங்கப்பதக்கம் திரைப்படம் மூலம் நிறைவேறியது.

உலகம் சுற்றும் வாலிபன் ஓடித் தீர்ந்த நிலையில் தங்கப்பதக்கம் வெளியானது. சிவாஜி ரசிகர்களே எதிர்பார்க்காத அளவுக்கு படம் மிரட்டலாக இருந்தது. மக்கள் குடும்பம் குடும்பமாக திரையரங்கில் வந்து படத்தைக் கண்டு ரசித்தனர். சென்னையில் சாந்தி, கிரவுன், புவனேஸ்வரி என மூன்று திரையரங்குகளில் படம் வெளியானது. முதல் 70 நாட்களில் இந்த 3 திரையரங்குகளில் 630 காட்சிகள் திரையிடப்பட்டன. இதில் சாந்தியில் 210 காட்சிகளும் கிரவுனில் 198 காட்சிகளும் புவனேஸ்வரியில் 158 காட்சிகளுமாக மொத்தம் 566 அரங்கு நிறைந்த காட்சிகள்.

தமிழகம் முழுவதும் ஐந்து இலட்சத்துக்கு மேல் வசூலித்தது. அன்று ஐந்து இலட்சம் என்பது பெரிய தொகை. 1974 ஜூன் 1 ஆம் திகதி வெளியானது. அன்றும் நிறைய நட்சத்திரங்கள் இருந்தாலும் வசூல் போட்டி எம்.ஜி.ஆருக்கும் சிவாஜிக்கும்தான். எழுபதுகளின் தொடக்கத்தில் இரு நடிகர்களின் ரசிகர்களும் பித்தேறித் திரிந்த காலகட்டம். 1973 மே 11 எம்.ஜி.ஆரின் உலகம் சுற்றும் வாலிபன் வெளியானது. எம்.ஜி.ஆர் இரு வேடங்களில் நடித்திருந்ததோடு படத்தையும் இயக்கியிருந்தார். ஒன்றுக்கு மூன்று நாயகிகள், வெளிநாடுகளில் படப்பிடிப்பு, அருமையான பாடல்கள், அட்டகாசமான சண்டைக் காட்சிகள் என ரசிகர்களை ஒரு வேர்ல்ட் டூரே அழைத்துச் சென்றார் எம்.ஜி.ஆர். படம் திரையிட்ட அனைத்துத் திரையரங்குகளிலும் திருவிழாக் கூட்டம். சென்னை தேவி பாரடைஸ் திரையரங்கில் திரையிட்ட 67 தினங்களில் 201 அரங்கு நிறைந்த காட்சிகள். மதுரை மீனாட்சியில் 241 அரங்கு நிறைந்த காட்சிகள்.

இந்த இரு திரையரங்குகளிலும் இதுதான் அதிகபட்சம். எம்.ஜி.ஆர் ரசிகர்கள் உலகம் சுற்றும் வாலிபனை கொண்டாடித் தீர்க்க, சிவாஜி ரசிகர்கள் பெருமிக் கொண்டிருந்தனர். அவர்களுக்கும் இதேபோலொரு இதேதான் நிலை. முக்கியமாக மதுரையின் பிரமாண்ட திரையரங்குகளில் ஒன்றான சென்ட்ரலில் முதல் 112 தினங்களில் 361 அரங்கு நிறைந்த காட்சிகள்.

அப்போதெல்லாம் பெரிய படங்களுக்கும் தினம் 3 காட்சிகள்தான். சனி, ஞாயிறில் 4 நான்கு காட்சிகள். கிட்டத்தட்ட அனைத்து காட்சிகளும் அரங்கு நிறைந்தது. முதல் 112 தினங்களில் 5,18,936 பேர் மதுரை சென்ட்ரல் திரையரங்கில் மட்டும் தங்கப்பதக்கத்தை கண்டு ரசித்துள்ளனர்.

இன்று தயாரிப்பாளர்களும் விநியோகஸ்தர்களும் திரையரங்கு உரிமையாளர்களும் படத்தின் உண்மையான வசூலை சொல்லத் தயங்குகின்றனர். வருமான வரி கட்ட வேண்டியிருக்குமே என்ற பயம். அன்று அந்தப் பயம் இல்லை. அல்லது, நேர்மையான வருமான வரியைக் கட்ட அன்று யாரும் தயங்கவில்லை. அதனால் படங்களின் வசூல் நிலவரங்களை படத்தின் விளம்பரங்களிலேயே வெளிப்படையாக அளித்து வந்தனர்.

அந்த வெளிப்படைத்தன்மை இன்று வரும்போது, தமிழ் திரைப்பட வர்த்தகம் இன்றைய இருண்ட நிலையிலிருந்து வெளிச்சத்துக்கு வரலாம். ■





# கடும் பஞ்சம் ஒருபுறம்

## ஏவுகணைச் சோதனை மறுபுறம்

கடும் உணவுப் பஞ்சம் நிலவும் ஒரு நாட்டில், அடுத்தடுத்து ஏவுகணைச் சோதனைகள் நடத்தப்பட்டதாக இதுவரை வரலாறு இல்லை. ஆனால், அந்த வரலாற்றை மாற்றி எழுதுவோம் என அணு ஆயுத ஏவுகணைச் சோதனைகளைச் செய்து கொண்டிருக்கிறது உணவுப் பஞ்சத்தில் சிக்கியிருக்கும் வடகொரியா.

ஜனாதிபதி  கிம் ஜாங் உன், வறுமையில் வாடும் வடகொரிய மக்களைக் கண்டுகொள்ளாமல், தன் நாட்டின் இராணுவ பலத்தை உலகுக்குக் காட்டவே முயன்றுவருகிறார். என்ன நடக்கிறது வடகொரியாவில்?

பல உணவுப் பஞ்சங்களைச் சந்தித்த நாடுதான் வடகொரியா என்றாலும் 1994 முதல் 1998 ஆம் ஆண்டு வரை அந்த நாடு கண்ட உணவுப் பஞ்சம் மிகக் கடுமையானது. அதில், ஆறு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் உயிரி ழந்தனர். மீண்டும் அப்படியான பஞ்சத்தை நோக்கித்தான் தற்போது அந்த நாடு நகர்ந்து கொண்டிருக்கிறது.



தன் அண்டை நாடான வடகொரியாவில் ஏற்பட்டிருக்கும் கடும் உணவுப் பஞ்சம் குறித்து முதலில் வெளியுலகுக்குச் சொன்னது தென் கொரியாதான். 2021, 2022 ஆம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட செயற்கைக்கோள் புகைப்படங்களை வெளியிட்டு, வடகொரியாவில் விளைச்சல் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதை விளக்கியிருக்கின்றனர் தென்கொரிய அதிகாரிகள். 2021 ஆம் ஆண்டைவிட 2022 இல் சுமார் 1,80,000 தொன் அளவுக்கு உணவு உற்பத்தி குறைந்திருப்பதாகவும் தென்கொரியா தெரிவித்திருக்கிறது.

தென்கொரியாவின் இந்தத் தகவல்களை உறுதிப்படுத்தும் வகையில் வடகொரிய அரசு ஊடகமான கே.சி.என்.ஏ, “விவசாயக் கொள்கைகளில் அடிப்படை மாற்றத்தைக் கொண்டுவர, நாட்டின் மூத்த அதிகாரிகள் ஒன்றுகூடி விவாதிக்கவிருக்கின்றனர். நாட்டில் அதிகரித்துவரும் விவசாயப் பிரச்சினைகளுக்கு மத்தியில், இது ஓர் அவசரமான கூட்டம்” என்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

வறட்சி, வெள்ளப்பாதிப்பு, காலநிலை மாற்றம் போன்ற தீவிரப் பிரச்சினைகளால் வடகொரியாவின் உணவு தானிய உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. கொரோனா காலத்தில்ஜனாதிபதி  கிம் ஜாங் உன் தேவையற்ற, மிகக் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்ததையும் ஒரு காரணமாகச் சொல்கிறார்கள். “கொரோனா தொற்றுக்குப் பிறகு, தன் நாட்டின் அனைத்து எல்லைகளையும் மூடிவிட்டது வடகொரியா. இதனால் பிற நாடுகளுடனான ஏற்றுமதி, இறக்குமதி தடைப்பட, கடும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தது. ஹஉலக நாடுகளை அச்சுறுத்தும் வகையில் அணு ஆயுதச் சோதனைகளைத் தொடர்ந்து நடத்திவருவதால், பல நாடுகள் வடகொரியாமீது பொருளாதாரத்தடைகளை விதித்திருக்கின்றன. இதனால், வடகொரியாவுக்குக் கிடைத்துவந்த மனிதநேய உதவிகளும் குறைந்துவிட்டன. எனவேதான், தற்போது வறட்சியால் ஏற்பட்டிருக்கும் உணவுப் பஞ்சத்தைச் சமாளிக்க முடியாமல் திணறுகிறது வடகொரிய அரசு” என்கிறார்கள் வடகொரியப் பிரச்சினைகளை உற்றுநோக்கும் பத்திரிகையாளர்கள்.

கடும் உணவுத் தட்டுப்பாடு காரணமாக வடகொரிய மக்கள் மக்காச் சோளத்தை வாங்கி உண்பதால், மக்காச் சோளத்தின் விலை 20% அதிகரித்துவிட்டது. தட்டுப்பாடு காரணமாக மற்ற உணவுகளின் விலையும் விண்ணை முட்டியிருப்பதாகக் கூறப்படுகிறது. தென்கொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் தப்பிச் சென்று அகதிகளாக வாழும் வடகொரிய மக்களின் மறுவாழ்வுக்கு வேண்டியதைச் செய்துவருகிறது ‘லிபர்ட்டி இன் நார்த் கொரியா’ என்ற அமைப்பு. இந்த அமைப்பின் தென்கொரியக் கிளையின் இயக்குநர் சோகீல் பார்க் , “வடகொரிய மக்கள் பட்டினியால் இறந்துகொண்டிருப்பதாக எங்களுக்கு நம்பத் தகுந்த ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன” என அதிர்ச்சியைக் கிளப்பியிருக்கிறார். இருந்தும், மக்கள் படும் அவதிகளையெல்லாம் துளியும் கண்டுகொள்ளாத அந்நாட்டின் அதிபர் கிம் ஜாங் உன், அணு ஆயுதச் சோதனைகளை இடைவிடாமல் நடத்திவருகிறார்.

2022 ஆம் ஆண்டில் மட்டும் சுமார் 70 ஏவுகணைகளை வடகொரியா சோதனை செய்திருப்பதாகத் தெரிகிறது. கடந்த பெப்ரவரி 23ஆம் திகதி, கண்டம்விட்டு கண்டம் பாயக்கூடிய நான்கு சக்திவாய்ந்த அணு ஆயுத ஏவுகணைகளை அடுத்தடுத்து விண்ணில் ஏவியிருக்கிறது வடகொரியா. இதை, அந்நாட்டின் அரசு ஊடகமான கே.சி.என்.ஏவும் உறுதிப்படுத்தியிருக்கிறது. இதுபோக, சொந்த நாட்டு மக்களையே அச்சுறுத்தும் சில சட்டங்களையும் வகுத்துவருகிறது வடகொரியா. கடந்த சில தினங்களுக்கு முன்புகூட, ‘வடகொரிய மக்கள் யாரும் என்னுடைய மகளின் பெயரான ‘ஜூ ஏ’ என்ற பெயரை வைத்துக்கொள்ளக்கூடாது. வைத்திருப்பவர்கள் அனைவரும் மாற்றிக் கொள்ள வேண்டும்’ என கிம் சட்டம் கொண்டு வந்ததாகச் செய்திகள் வெளியாகின.

“மக்கள் பிரச்சினைகளைக் கண்டுகொள்ளாமல், இராணுவத்துக்கு அதிக அளவு பணம் செலவழிப்பதும் கடுமையான சட்டங்கள் விதிப்பதற்கு நேரம் செலவழிப்பதும்தான் தற்போது வடகொரியாவில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிக்கும், உணவுப் பஞ்சத்துக்கும் முக்கிய காரணம்” என்கிறார்கள் தென்கொரியப் பத்திரிகையாளர்கள்.

இந்த நிலையில், வடகொரிய அரசு நாளிதழான **Rodong Simmun**, “உணவுத் தட்டுப்பாட்டைச் சமாளிக்க வெளிநாடுகளிடம் உதவி கோருவது என்பது விஷமிட்டாயை உண்பதற்குச் சமம். ஏகாதிபத்தியவாதிகள் நமக்கு உதவி செய்வதைப்போல பொறி வைத்து, நம்மை அடிபணியவைப்பதற்கும் நம்மிடம் கொள்ளையடிப்பதற்கும் முயல்வார்கள்” என்று செய்தி வெளியிட்டிருக்கிறது. “சில ஏகாதிபத்திய நாடுகள், உதவி செய்வதைப்போல மற்ற நாடுகளை அடிமைப்படுத்த முயல்வது உண்மைதான் என்றாலும் பஞ்சத்திலிருந்து மீள தற்போது வடகொரியாவுக்குக் கட்டாயமாக மற்ற நாடுகளின் உதவி தேவை” என்று அடித்துச் சொல்கிறார்கள் சர்வதேச அரசியல் வல்லுநர்கள்.

உலக நாடுகளின் உதவிகளை உதறித்தள்ளும் வடகொரியா, இந்தப் பெரும் பஞ்சத்திலிருந்து எப்படி மீளப்போகிறது என்ற கேள்விக்கான விடையை, காலம்தான் சொல்ல வேண்டும்! ■

முருகபூபதி




# கணினி தொழில்நுட்பத்தை புறக்கணிக்கும் சிங்கப்பூர் படைப்பாளி

## 28 முதல் சந்திப்பு

பெரும்பாலான எழுத்தாளர்கள் நவீன கணினி தொழில் நுட்பத்தையே பயன்படுத்தி எழுதி வருகிறார்கள். ஆனால், அந்தப்பக்கமே செல்லாமல், மின்னஞ்சல் பாவனையும் இல்லாமல், தொடர்ந்தும் கையால் எழுதி, தபாலில் அனுப்பிக்கொண்டிருக்கும் எண்பது வயதை நெருங்கும் ஒரு படைப்பாளியை இந்தப்பதிவில் தெரிந்துகொள்ளுங்கள்!

உலகில் தமிழர்கள் இல்லாத நாடுகளும் இல்லை. தமிழர்க்கென்று தனியாக ஒரு நாடும் இல்லையென தமிழ்த்தேசியவாதிகள் அடிக்கடி சொல்வதுண்டு.

அவ்வாறு சொல்வதற்கு முக்கிய காரணமே, கல் தோன்றி மண்தோன்றாக் காலத்துக்கு முந் திய இனமே தமிழ் இனம் என்ற வாய்ப்பாடுதான்.

சமகாலத்தில் உலகெங்கும் மனிதர்கள் அகதிகளாக தங்களுக்கென ஒரு வாழ்விடம் தேடி ஓடிக்கொண்டிருக்கையில், தமிழர்களுக்காக மாத்திரம் ஒரு நாடுவேண்டுமா..? என்றும் யோசிக்கத் தூண்டுகிறது.

இந்தப்பதிவில் வரும் இராம. கண்ணபிரான் தனது பத்துவயது பராயத்தில் தமிழ் நாட்டிலிருந்து கப்பல் மார்க்கமாக சிங்கப்பூர் வந்தவர். அங்கேயே ஆரம்பக் கல்வியைக் கற்று, தமிழ் ஆசிரியராகி, சிங்கப்பூர் எழுத்தாளர் என்ற பெருமையோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

எழுத்துலகில் பிரவேசித்த காலம் முதல், இலங்கையில் எங்கு சென்றாலும் முதலில் தேடிச்செல்வது கலை, இலக்கியவாதிகளைத்தான்.

அவுஸ்திரேலியாவில் புகலிடம்பெற்ற பின்னர், உலகின் எப்பாகம் சென்றாலும் தேடிச்செல்வதும் இவர்களைத்தான்.

1990 ஆம் ஆண்டு முதல் தடவையாக சிங்கப்பூர் சென்றிருந்தபோது, அங்கிருந்த குடும்ப நண்பர் கட்டடப் பொறியியலாளர் கலாநிதி சற்குணராஜாவின் வீட்டில் சில நாட்கள் நின்றேன். அவரது மனைவி பத்மினி கலை, இலக்கிய ஆர்வலர். கவியரசு கண்ணதாசனின் குடும்ப சிநேகிதி. இவரது சமையற் கலை சம்பந்தமான ஒரு நூலை கண்ணதாசன் பதிப்பகம் முன்னர் வெளியிட்டுள்ளது.



பத்மினி சற்குணராஜாவிடம் சிங்கப்பூரில் வதியும் எழுத்தாளர்களைச் சந்திக்க விரும்புகின்றேன் எனச் சொன்னேன். இங்கே பலர் இருக்கிறார்கள். அவர்களில் நமக்கு நன்கு தெரிந்தவர்தான் கண்ணபிரான். அவரைச்சந்திக்க ஏற்பாடு செய்கின்றேன் எனச்சொல்லிவிட்டு, குறிப்பிட்ட அன்பரை வீட்டுக்கு அழைத்தார்.

அன்று முதன் முதலில் நான் சந்தித்த சிங்கப்பூர் எழுத்தாளர்தான் திரு.இராம.கண்ணபிரானும் எனது இலக்கிய நட்பு வட்டத்தில் இணைந்து கொண்டார். சிங்கப்பூர் செல்லும் சந்தர்ப்பங்களிலெல்லாம் இவரைச் சந்திப்பது வழக்கமாகிவிட்டது.

சிங்கப்பூர் பொது நூலகம், கடற்கரைச்சாலை இலக்கிய சந்திப்பு முதலானவற்றுக்கெல்லாம் என்னை அழைத்துச்செல்லும், இராம.கண்ணபிரான், பல இலக்கியவாதிகளையும் எனக்கு அறிமுகப்படுத்தியுள்ளார்.

தமிழ்நாட்டிலிருந்து மட்டுமன்றி ஏனைய நாடுகளிலிருந்தும் சிங்கப்பூருக்கு வருகை தரும் படைப்பிலக்கியவாதிகளை முன்னின்று அழைத்து, கொண்டாடும் பண்பினையும் இயல்பிலேயே தன்னகத்தில் வைத்திருப்பவர்.

சுவாரஸ்யம் குன்றாமல் உரையாடும் இயல்பினைக்கொண்டவர். சிங்கப்பூரைப்பற்றியும் அங்கு வாழும் தமிழ் மக்கள், கலை, இலக்கியவாதிகள், ஊடகங்கள், தமிழ்ப் பாடசாலைகள், முதலான சகல தகவல்களையும் விரல் நுனியில் வைத்துக்கொண்டு பேசுவார். கேட்டுக்கொண்டே இருக்கலாம்.

இவரது பூர்வீகம் தமிழ் நாட்டில் தஞ்சாவூர். 1943 ஆம் ஆண்டு அங்கே பிறந்திருக்கும் கண்ணபிரான், தமது பத்து வயது பராயத்தில் தந்தையாருடன் நாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து கப்பலில் பயணித்து சிங்கப்பூருக்கு வந்தவர். அப்பொழுது சிங்கப்பூரில் இலங்கை - இந்தியத்தமிழர்கள் சுமார் 75 ஆயிரம்பேர்தான் இருந்தார்கள்.

அங்கே லிட்டில் இந்தியா எனப்படும் பிரதேசத்தில் தந்தையார் நடத்திக்கொண்டிருந்த புடவைக்கடையில் தங்கியிருந்தே படித்திருக்கிறார். பாடசாலை ஆசிரியரானார். தாயகம் சென்று மணம் முடித்து திரும்பியபின்னர் குடும்பத்துடன் தொடர்ந்தும் சிங்கப்பூர் வாசியாகிவிட்டார்.

சிங்கப்பூர் ஆசிரியர் சங்கம், ஆசிரியர் கூட்டுறவுச் சங்கம், தமிழ் எழுத்தாளர் கழகம் முதலானவற்றில் ஆரம்ப கால உறுப்பினர்.

1990 ஆம் ஆண்டு அந்த முதல்சந்திப்பில் கண்ணபிரான், தான் எழுதி தமிழ்நாட்டில் வெளியான இருபத்தியைந்து ஆண்டுகள், உமாவுக்காக, சோழன்பொம்மை ஆகிய கதைத்தொகுதிகளை எனக்குத்தந்தார். அவை அனைத்தும் தமிழ்நாடு தமிழ்ப்புத்தகாலயத்தின் வெளியீடுகள்.

அக்காலப்பகுதியில் அதே தமிழ்ப்புத்தகாலயத்தின் வெளியீடாக வந்திருந்த எனது சமாந்தரங்கள் கதைத் தொகுதியை அவருக்கு கொடுத்தேன்.

இவ்வாறு எம்மை நெருங்கச் செய்தமைக்கு இலக்கியம் மட்டுமன்றி தமிழ்ப்புத்தகாலயமும் ஒரு காரணம்தான்.

சிங்கப்பூர் தேசியப் புத்தக மேம்பாட்டு மன்றம், அமெரிக்கா அயோவா பல்கலைக்கழகம், தாய்லாந்தில் தென்கிழக்காசிய எழுத்தாளர் அமைப்பு, சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் ஆகியனவற்றின் விருதுகள் உட்பட பல விருதுகளையும் பரிசுகளையும் பெற்றவர் இராம.கண்ணபிரான்.

மலேசியா எழுத்தாளர் நவீனன், தமது வல்லினம் இதழின் வாசகர் வட்டத்தின் சார்பில் இவர் பற்றிய ஒரு ஆவணப்படமும் தயாரித்துள்ளார்.

எங்கோ பிறந்து, எங்கோ வாழநேரிட்டு, சுயமாகவே படைப்பிலக்கியவாதியாகி, பல நூல்களையும் வரவாக்கி, இலக்கிய விருதுகளையும் பெற்று, தான் வாழும் சுற்றுச்சூழலில் நிகழ்ந்த கலை, இலக்கிய மாற்றங்களையும் அவதானித்து, மனதிற்குள் அவற்றை ஆவணப்படுத்தி, மிகத் தெளிவாக வெளிப்படுத்தும் ஆற்றல் மிக்கவர் கண்ணபிரான்.

இளமைப் பருவத்தில் சுமார் பத்தாண்டுகாலம், இவரது தந்தையார் இராமசாமி, தனது வியாபார நிலையத்தில் அங்கு பணியாற்றிய ஊழியர்களின் பொறுப்பில் இவரை விட்டு விட்டு, தமிழகம் திரும்பியிருக்கிறார்.

வதிவிடத்தில் கிடைத்த தனிமையில் நிறைய வாசித்து வாசிப்பு அனுபவத்தை பெருக்கிக்கொண்டவர், இலக்கியப் பிரதிகளையும் எழுதி, சிங்கப்பூர் தமிழ் வானொலிக்கும் தமிழ் முரசு பத்திரிகைக்கும் அனுப்பினார். அந்த ஊடகங்கள் இவருக்கு சிறந்த களம் வழங்கின.

சிங்கப்பூர் தமிழர்களின் வரலாற்றையும் தமிழ்க் கல்வி, கலை, இலக்கிய, ஊடகத்துறை பற்றியும் எழுதினால், இராம.கண்ணபிரானை தவிர்த்துவிட முடியாதளவுக்கு தனது நற்பண்புகளினாலும் ஆளுமையினாலும் ஆழமாக தடம் பதித்திருப்பவர்.

டெல்லியிலும் ஹைதராபாத்திலும் நடைபெற்ற எழுத்தாளர் விழாக்களில் பங்கேற்றிருக்கும் இவர், சிங்கப்பூரில் இயங்கும் அரச சார்பு கலை, இலக்கிய, சமூக அமைப்புகளின் ஆலோசகராகவும் விளங்குகிறார்.

சிங்கப்பூர் முன்னாள் பிரதமர் லீ குவான் யூ அவர்களை இரண்டு தடவைகள் சந்தித்துப்பேசியிருக்கும் கண்ணபிரான், அவரிடம்தான் ஒரு எழுத்தாளன் எனச்சொன்னதும், அப்படியா...? என்று கேட்டு அவர் தன்னை திகைப்பில் ஆழ்த்திவிட்டதாக ஒரு நேர்காணலில் சொல்லியிருக்கிறார்.

சிங்கப்பூருக்கு வெளியே இருப்பவர்கள், அங்கே முழுமையான பேச்சு, எழுத்துச்சுதந்திரம் இருக்கிறதா...? என்ற பொதுவான கேள்வியைத்தான் கேட்பார்கள். தனது பள்ளிப்பருவம் முதல் தொடர்ந்தும் எழுதியும் பேசியும் வரும் எழுத்தாளர் இராம. கண்ணபிரான், அந்த நாட்டுக்குள் பிரவேசித்த போது அது மூன்றாம் உலக நாடுகளின் வரிசையில்தான் இருந்தது. ஆனால், தற்போது இதர மூன்றாம் உலக நாடுகள் விழியுயர்த்திப்பார்க்கும் வகையில் சிங்கப்பூர் முன்னேறியிருக்கிறது என்பதை தனது மௌனப்புன்னகையினால் சொல்பவர் இராம.கண்ணபிரான்.

எண்பது வயதைப் பூர்த்திசெய்யவிருக்கும் இந்த எழுத்தூழியருக்கு எமது வாழ்த்துகள். ■

# இரண்டில் ஒன்று கூறு



✍ ராதா

யுத்தத்துக்கு
செல்லுமுன்
இறுதியாக வானத்தை
பார்க்கிறாயா?
அல்லது நமதுதேசம்
அழியப்போகிறதென
வருந்துகிறாயா?
இரண்டில் ஒன்றை
கூறி விட்டுச்செல்



✍ தாட்ஷா வர்மா

# ஸகியே இந்த வேளையில்

அடவுகளின் சேர்க்கை
நறுமணம் கொண்ட
பூமாலை போல
கோர்வைகளாகின

அலாரிப்பு எனும் விடியலின்
பின்
ஸ்வரமும் ஜதியும்
இணைந்து
ஜதீஸ்வரம் ஆகியது

நாயகா நாயகி பாவம்
பதவர்ணமாகியது
கோபாலனின்
குறும்புத்தனம்
சப்தம் ஆகியது

உன் கால்களில் கொஞ்சி
விளையாடும்
சலங்கை இன்று
ஆடப்போவது என்ன?

நிருத்தமா? நிருத்தியமா?
நாட்டியமா?
அன்று தாருகாவனத்தில்
சிவதாண்டவம்

விஷ்ணு ஆடியது காலிங்க
நர்த்தனம்
இன்று நீ ஆடப்போவது
லாசிய தாண்டவமா?

ஸகியே இந்த வேளையில்
நீ பல்கலைகளையும்
பற்று
நாட்டியக்கலையில்
சிகரத்தை எட்டிப்பிடிக்க
எனது வாழ்த்துகள்

# விதிவிலக்கு



✍ ரமா

கடல்வளம் மலைவளம்
செறிந்துள்ள நாட்டில்
மனித உரிமைக்கே
பஞ்சம்
இதில் நீ மட்டும்
விதிவிலக்கா?

# கடலலையில் என் மனம்



✍ மேரி ஜென்சிகா எட்வேட் றெஜி.

நெய்தல் நிலத்திலே
உன்னைக் கண்டேன்!
ஏன் உன்னைக் கண்டேன்
என்றே இன்று அறிந்தேன்

அலையின் ஓசையில் எனை
மறந்தே! உனை
நேசித்தேன்

ஏனோ தெரியவில்லை
உன்னைக் கண்டதுமே
இன்பமோ கடலே!

காற்றுடன் கலந்த
அலையினை எனைநோக்கி
வீசுவது ஏன்?

நரக உலகில் இருந்து
எனைக் காப்பாற்றி
தந்தையின் இல்லத்தில்
இன்பமுற
அழைக்கிறாயோ!

மாறாத வடுக்கள்
தொலைந்து விட்டன

மனதிலே இன்பம் இல்லை
என்றால், உன்னை
நினைக்கிற போதே மனம்
மகிழ்கின்றதே!

உனக்குள் எனை நீ
ஈர்த்தால், என்னவன் எனை
இழந்து தவிப்பது உனக்கு
ஒரு கணம் என் தாயை
நினைத்து பார்த்தாயா!
தாயை விட்டு வா? என்றே நீ
எனை அழைப்பது
சரியாகுமா கடலே!

மனம் உடையும் போது
உனை அழைப்பேன் அது
ஏனோ? உன் அலையின்
ஓசையில் என் மனம்
மகிழவே!

# நிலா



✍ லக்சன்

விண்ணிலே நிலவொன்று
வட்டமாய் தெரியுதம்மா!

அதன் ஒளியில் உலகமே
உறக்கம் கொள்ளுதம்மா!

மணம் வீசும் மல்லிகையும்
தன் இதழை விரிக்குதம்மா!

ஆழியில் மீனவனின்
தொழிலும்
தொடங்குதம்மா?

அன்னையின் கைகளால்
சேயும் நிலா சோறு
உண்ணுதம்மா!

விண்மீனும் சேர்ந்து
நிலவிற்கு வனப்பு
ஊட்டுதம்மா?

பாட்டியின் நிலாக் கதைகள்
கேட்டு பாலர்கள் கண்ணும்
உறங்குதம்மா?

அடர் காட்டிலும் பல
மாயங்கள் நடக்குதம்மா!

சுடர் ஏடும் நிலவின்றி
இல்லையம்மா!

நிசப்த இரவிலும் பல
அதிசயங்கள்
நிலவால்தானம்மா!

அதனாலோ! நிசிக்கு
என்றும் அரசன்
நிலவுதானம்மா!

# இரு மலர்கள்

மலர் 16

தொடர்கதை

யாழ் சத்யா



ஒற்றை ஜடையின் நுனியை மடித்துக் கட்டியிருந்த போது தெரியாது இருந்த அவள் கூந்தல் அழகு இப்போது பிரமிக்க வைத்தது. இரு நீண்ட கருநாகங்களாக இடையையும் தாண்டி அசைந்த பின்னல்களைப் பார்த்து அந்த ஆண்களாலே வியக்காமல் இருக்க முடியவில்லை.

"உனக்கு நல்ல வடிவான நீள முடி கவின்யா... என்ன எண்ணெய் வைக்கிறனீர்? என்ர ஆளுக்கும் இருக்கே... எலி வால் மாதிரி..."

சோகமாக சொன்னான் ஒரு சீனியர் மாணவன்.

"நன்றி அண்ணா... செவ்விளநீர் தேங்காய் எண்ணெய்க்குள் கரிசலாங்கன்னி, பொன்னாங்காணி, கறிவேப்பிலை, செவ்வரத்தம்பூ எல்லாம் போட்டு அம்மா காய்ச்சி தாறவ. அதோட எங்கட பரம்பரையில எல்லாருக்கும் நீள முடிதான்... நான் வேணும் என்றால் எண்ணெய் கொண்டு வந்து தரட்டே அண்ணா..." அவனின் உண்மையான பாராட்டு உணர்ந்து வெள்ளந்தியாய் உரைத்தவளுக்கு,

"ஓம் கவி. கொண்டு வந்து தாரும். அதை வைச்சாவது அவளுக்கு வளருதா பாப்பம். சரி நீர் இப்ப வகுப்புக்கு போம்" என்று விடை கொடுத்தான் அந்த மாணவன். தனது கூந்தல் அழகினாலேயே ஒரு கும்பல் மாணவர்களின் ராக்கிங் பிரச்சினைகளை தனக்கு சாதகமாக கையாண்டவள் இன்னும் தன்னையே பார்த்துக் கொண்டிருந்த ஸாமிற்கு கையாட்டி விடைகொடுத்து விட்டு தனது விரிவுரை நடக்கும் கூடத்திற்கு சென்றாள்.

இரட்டை ஜடைகள் அசைந்தாட ஒரு தென்றலாய் மிதந்து சென்றவளைப் பார்த்து பெருமூச்சொன்றை வெளியேற்றினான் ஸாம் அபிஷேக். அவன் மனதோ 'எப்போதடா இந்த நீண்ட கருங்குழலில் தனது விரல்களை நுழைத்து அளைந்து விளையாடலாம் என்ற பேரேக்கம் கொண்டது.

அது என்னவோ பாண்டிய அரசனில் இருந்து இன்றைய எங்கள் தலைமுறை ஆண்கள் வரை பெண்களின் கூந்தலில் ஒரு மயக்கம். கூந்தல் அழகிலேகூட தங்கள் மனதைப் பறி கொடுத்து டூயட் பாடி விடுகிறார்கள்.

மாலையில் விரிவுரைகள் முடித்து வெளியே வந்த கவி அங்கே மரத்தின் கீழே ஸாமும் நண்பர்கள் குழாமும் காத்திருப்பதைப் பார்த்து வதனத்திலே மென்னகை துலங்க வாயிலை நோக்கி சென்றாள். இவர்களும் பின் தொடர்ந்தார்கள்.

ஒருநாளும் தனியாக யாழ்ப்பாணம் வந்து போகாத அவளுக்கு அவர்கள் பின்தொடர்கையே ஒரு பாதுகாப்பு உணர்வைத் தோற்றுவித்தது.

பல்கலைக்கழகத்திலிருந்து அவர்கள் ஊருக்கு நேராகப் பேரூந்து கிடையாது. யாழ் நகருக்கு சென்று அங்கிருந்துதான் அவர்கள் ஊருக்குரிய பேரூந்தைப் பிடிக்க வேண்டும்.

அனைவரும் யாழ் நகரை அடைந்ததும் கவி நிரோஜனை நெருங்கி,

"அண்ணா... நாளைக்கு ட்ரெஸ் கோட்ல கம்பஸூக்கு வர வேணும். அதால உடுப்பு எடுக்கப் போறன். ஃபாங்ல போய் காசு எடுக்க வேணும்"

அவள் சொல்லி முடிக்க முதலே,

"ஓகே கவி... நாங்களும் வாறம்... பயப்பிடாமல் போம்..."

கவின்யா தனியாக செல்வதற்கு பயப்பட்டதன் காரணம், பல வருட யுத்தங்களின் பின் இப்போது தான் சமாதான பேச்சு வார்த்தைகள் ஆரம்பித்ததைத் தொடர்ந்து வடபகுதியையும் தென்பகுதியையும் இணைக்கும் ஏ9 பாதை திறக்கப் பட்டுள்ளது. அதனால் தென்பகுதி சிங்கள மக்களெல்லாம் யாழ்ப்பாணம் நாக விகாரையை தரிசிக்கவும் யாழ்ப்பாண விசித்திர பூமியைச் சுற்றிப் பார்க்கவும் படையெடுத்து வந்து கொண்டிருந்தனர். சிங்கள வியாபாரிகளும் தென்பகுதிப் பொருட்களையெல்லாம் வீதியெங்கும் கடை பரப்பியிருந்தனர். இதனால் யாழ் நகர் எங்கும் மிகுந்த சனசஞ்சாடி மிக்கதாகவும் இளைஞர்கள் கூட்டங்களாலும் நிரம்பி வழிந்தது. வெளி மாவட்ட இளைஞர்களின் கிண்டல் கேலிகளை சந்திக்க நேரும் என்பதற்காகதான் கவி தன் நண்பர்கள் துணையை நாடியது.

அவர்கள் வருவதாகச் சொன்னது ஆறுதல் அளிக்க, ஸாமிடம் கண்களாலேயே அனுமதி பெற்று இலங்கை வங்கி தானியங்கி இயந்திரத்தில் சென்று பணத்தை எடுத்துக் கொண்டு யாழ் நகரின் பிரபல புடவை நிலையமான ராசி சில்க்ஸ்ஸை நோக்கி சென்றாள்.

மற்றவர்கள் கவனத்தை கவராமல் அவளைப் பின் தொடர்ந்து இவர்களும் கடைக்குச் சென்றார்கள். இரண்டு நீள கறுத்தப் பாவாடைகளும் சீத்தைத் துணி போல் தோற்றம் தரக் கூடிய பெரிய பெரிய பூக்கள், வட்டங்கள், கோடுகள் போட்ட பருத்தித் துணியில் முழு நீளக்கை மேற்சட்டைகள் ஐந்தும் கவி எடுத்துக் கொண்டாள்.

சேர்ட் எடுக்கிறோம் என்று கடையையே இரண்டு பண்ணி விட்டு கவி கிளம்பியதும் கடைப் பையன்களின் திட்டையும் இலட்சியம் செய்யாது இவர்களும் சென்று பருத்தித்துறை 751 ஆம் இலக்க அரச பேரூந்தில் ஏறிக் கொண்டார்கள்.

பாதி இருக்கைகள் நிரம்பி இருக்க கவி சென்று கடைசி இருக்கை ஜன்னலோரத்தில் அமர்ந்து கொண்டாள். ஸாம் அவள் பக்கத்தில் அமர நிரோஜன், சுதன், சுதர்சன் தொடர்ந்து அருகருகே அமர்ந்து கொண்டார்கள்.

வேறு எந்த ஆணும் அருகில் அமராமல் ஸாம் இருந்ததே நிம்மதியாக உணர்ந்த கவி, நிரோஜனிடம் எட்டி பணத்தைக் கொடுத்து,

"அண்ணா... ப்ளீஸ் சரியான தாகமா இருக்கு... சாப்பிட வடையும் குடிக்க ஏதாச்சும் எல்லாருக்குமா வாங்கிட்டு வாறிங்களா? பஸ் வெளிக்கிட இன்னும் இருபது நிமிடம் இருக்குத்தானே..."

ஆண் பையன்கள் இப்படி ஒஸியில் பணம் வந்தால் விடவா போறார்கள். கவியிடம் பணத்தை எட்டி வாங்கிய சுதர்சன்,

"நானும் சுதனும் போயிட்டு வாறம்" என்று மகிழ்ச்சியாகப் புறப்பட்டான்.

"டேய் மலாயன் கபேயில வடை வாங்குடா" இறங்கிச் சென்றவர்களுக்கு ஸாம் குரல் கொடுத்தான்.

சென்றவர்கள் யாழ்ப்பாணத்தில் வடைக்கு பெயர் போன மலாயன் கபே வடையோடும் பச்சை மிளகாய்ச் சம்பல் பார்சலோடும் நெக்டோ சோடா பெரிய ஒன்ரரை லீற்றர் போத்தலோடும் வந்தார்கள்.

நிரோஜன் சம்பல் பார்சலைப் பிரித்துப் பிடித்து மடியில் வைத்திருக்க மற்றவர்கள் ஆளுக்கொரு வடையை எடுத்து சம்பலில் தோய்த்து உண்ண ஆரம்பித்தார்கள். கவி சம்பலை மறுத்து விட்டு ஒவ்வொரு கடியாக அந்த மெதுவடையை ருசித்துக் கொண்டிருந்தாள்.

திடீரென ஸாம் தான் பாதி உண்டிருந்த தனது வடையை கவியின் கையிலே வைத்து விட்டு அவள் பாதி முடித்திருந்த வடையை தன் கைக்கு மாற்றி விட்டு எதுவுமே நடவாத மாதிரி தொடர்ந்து உண்ண ஆரம்பித்தான்.

கவியோ ஒரு கணம் திகைத்தவள் பின்னர் நடந்ததை உணர்ந்து கன்னங்கள் வெக்கச் சிவப்பில் பூரிக்க அவன் எச்சில் பட்ட வடையை மேலும் ரசித்து உண்டாள். கடைக் கண்களால் அவள் தான் சுவைத்துக் கொடுத்த மீதி வடையை உண்பதைக் கண்டும் காணாததுமாய் பார்த்து ரசித்தவன் அவள் தன் மீது கொண்ட காதலை ஒப்புக்கொள்வதை உணர்ந்து மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தான்.

இவர்கள் இருவரதும் இந்தக் காதல் நாடகத்தை எழுந்து நின்று சாப்பிட்டுக் கொண்டிருந்த சுதர்சன் கவனித்து விட்டு,

"பிள்ளையாரப்பா... இன்றைக்குப் போலவே எப்பவும் இதுகள் ரெண்டும் இணை பிரியாமல் சந்தோசமா இருக்கோணும்" என்று மனசார வேண்டிக் கொண்டான். அவன் வேண்டுதலைப் பார்த்து விதி நகைத்ததைப் பாவம் அந்த உண்மை நண்பன் உணர்ந்து கொள்ளவில்லை. ஸாம் - கவி காதல் கை கூடுமா? இல்லையா?

**மலரும்...**

சிறுகதை

# சாத்தானின் உலகம்

ஆனந்தி



எலும்புக்கூடே உடைந்து நொறுங்கிப் போகுமளவுக்கு, சுவிஸ் குளிர் வாட்டி வதைத்தது. அகிலனுக்கு இதெல்லாம் பழகிப் போன விடயமாயிற்று. இந்த விடயம் சஞ்சாரங்களைப் பெரிதுபடுத்தினால், துக்கம்தான் மிஞ்சும் என்று அம்மா பல தடவைகள் சொல்லியிருக்கிறாள். ஆகவே எது நேர்ந்தாலும் சமநிலை கெடாமல் இருக்கப் பழகிவிட்டதால், அவனுக்கு இந்தக் குளிர் ஒன்றும் பெரிதாகத் தோன்றவில்லை. ஊரில் இருக்கும் அம்மாவின் நினைவு வரும் போதெல்லாம், அவனுக்கு இந்த மாற்றம், உன்னத இருப்பு நிலை தானாகவே வந்துவிடும்.

அவன் வேலைக்கு புறப்படும் நேரம். சொகுசாக ஆடாமல் குலுங்காமல் போய் வருவதற்கு கார் இருந்தாலும் அவன் தினமும் உடல் மெலிவதற்காக சைக்கிளிலேயே போய்வருகிறான். குளிருக்காக போட்டிருந்த ஸ்வெட்டரை மாற்றி விட்டு, வேலைக்கான சீருடையை அவன் அணிந்து கொண்டிருந்த போது ,போன் மணி ஒலித்தது. இந்த வேளையில் யாராக இருக்குமென்ற யோசனையுடன், போனை எடுத்தவுடன், எதிர்த் திசையிலிருந்து சங்கரின் குரல் கேட்டது. அவன் இவனது ஒன்றுவிட்ட அண்ணன். முன்பு இயக்கத்திற்குப் போய் ஒரு வழியாக மீண்டு வந்து, எப்படியோ தப்பிப் பிழைத்து, இப்போது அவுஸ்திரேலியாவில் இருக்கிறான். அகில் கேட்டான் என்னடா இந்த நேரம் எடுக்கிறாய்? ஏதேனும் அவசரமே?

ஓமடா! உன்னை ஒன்று கேப்பன். கோபிக்க மாட்டியே?

சரி சொல்லு. உன்ர கதையைக் கேட்டிட்டு எனக்கு கோபம் வருகிறதோ இல்லையோ என்பதைப் பிறகு பாப்பம். முதலிலை கதைக்கு வா

தெரியாமல்தான் கேக்கிறன். நீ இன்னும் எத்தனை நாளைக்குத்தான் அவையளுக்கு உழைச்சுக் குடுக்கப் போறாய்? நீ வாழ வேண்டாமே?

அதென்ன பெரிய வாழ்க்கைக் கதை? ஓ! கல்யாணம் முடிச்சுப் பிள்ளை பெத்துப் போடுற வாழ்க்கை இருக்கல்லே! அதைச் சொல்ல வருகிறானா? எனக்கும் வயசாச்சுது இல்லே. சரியாக முப்பத்தைஞ்சு வயசாகுது. இவ்வளவு வயசான பிறகும் ஏன் நான் இப்படி இருக்கிறன்? அல்லது என்னைக் கொண்டு உழைப்பிச்சு பண மழையிலே குளிர் காய அம்மா தான் தன்ர சுய இன்பத்திற்காக என்னை இப்படிப் பலிக் கடாவாக ஆக்கி விட்டிருக்கிறாளா? அவள் துரோகி என்று சொல்ல வருகிறானா இவன்? எதுக்கு இப்ப இந்தக் கதை? ஏன் கேக்கிறான் ஒன்றும் புரியேலையே.

என்ன நான் கேட்டதற்குப் பதிலையே காணம்.

நீ கேட்டது மிகப் பெரிய கேள்வி அதுக்குப் பதில் சொல்லிக் கதைக்கிற மூட்டிலை இப்ப நான் இல்லை. வேலையாலை வந்தவுடன், பின்னேரம் உன்ர முழுக் கேள்விக்குமான பதிலை, நல்லாய் யோசிச்சு, அப்ப சொல்லுறன், என்று கூறி விட்டுப் போனை வைத்து விட்டான்.

இதைப் பற்றி சங்கர் என்ன நினைத்திருப்பானோ தெரியவில்லை, இவ்வளவு கேட்கிறவனிடம், ஒரேயொரு கேள்வி மட்டும் நான் கேக்க வேணும் எதற்கும் பின்னேரம் வரட்டும் யோசிப்பம்.

அகிலனுக்குப் பெரிய மன உளைச்சலாக இருந்தது. பெரிய பயந்தாங்கொள்ளிப் பயல் அவன். வாயாலேயே ஆளைக் கொன்று தீர்க்கிற சுபாவம் மட்டும் தான் அவனுக்கு. அதிலதான் அவன் வீரம் முழுதும். எப்படித்தான் துவக்குத் தூக்கப் போனானோ தெரியவில்லை. இதை அவனிடம் போய்க் கேட்டால் என்ன சொல்வான்? நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு, இதிலும் வீரக் கதைதான் கூறுவானா? கேட்டுப் பாப்பம்

அவன் கேள்வி அப்படியே தொக்கி நின்றது . அம்மா இன்னும் ஊரிலேதான் இருக்கிறாள். மூன்று தங்கைகள் அவனுக்கு. பொறுப்பில்லாத அப்பாவை மணமுடித்தும் அவன் அம்மா தீக்குளித்து எழுந்ததை யார் கண்டார்கள்? ஒரு வருடம் இனக் கலவரம் மூண்டதால், அவருக்கு வேலையில்லாமல் போனதே நாங்கள் நடுத் தெருவில் நின்றபோது, எங்களை வாழ வைக்க ஆர் வந்தார்கள்? சங்கரா எங்களுக்குச் சோறு போட்டான்? பின்னேரம் வரட்டும். அவனுக்கு வேதமே சொல்லி வைக்கிறன்.

இது நடந்த பிறகு வேலையிலே மனம் ஒட்டவில்லை. அகிலனுக்கு. வேலை என்றாலும் அப்படியொன்றும் மேலான வேலையில்லை. நன்றாகப் படித்து வரவேண்டிய அவன், இன்று கன்னியாஸ்திரி மடத்தில், சமையல் வேலை தான் செய்கிறான் என்று நினைக்கும் போது, அம்மா அழுதே விடுவாள். உறவுகள் எவரும் கை கொடுத்திருந்தால், அவன் ஒரு பொறியியலாளனாகவே வந்திருப்பான் நன்றாகப் படிக்கக் கூடிய பையன் கணக்கிலே புலி. அவனை அதே வழியில் வாழ வைக்க வேண்டுமென்ற பரந்த மனோபாவம் இல்லாமல் என் வீடு, என் மக்கள் என் குடும்பம் என்ற நிலைதான் எல்லோருக்கும் தங்கள் பிள்ளைகளுக்காக உயிரை விடுகிறவர்கள், அவனுக்காக ஒரு புல்லைக்கூட எடுத்து நகர்த்தவில்லை என்பது, அனுபவ ஞானமாய் வந்த பாடம். அம்மாவைக் கேட்டால், இந்த உண்மையை வேதமாகவே எடுத்துச் சொல்வாள்

மாலை ஐந்து மணிக்கு அவன் வேலையால் மீண்டு வந்தவுடனேயே, சங்கர் போனில் அவனைத் துளைத்தெடுக்க வந்துவிட்டான். அவனுக்கு ஒரேயொரு மகள். நன்றாகப் படித்து, சிட்னியில் ஒரு டாக்டராக இருக்கிறாள். எப்படியாவது இருந்து விட்டுப் போகட்டும் வீணாக என் தலையை ஏன் உருட்ட வேண்டுமென்று, அவன் மனம் கசந்து கொண்டிருந்த போதே, சங்கரின் அழைப்பு வந்தது. ஒரு நாசகாரனின் முகம் போல, அவன் முகம் மனத்திரையில் தோன்றியது. வேதமே கூறுவதற்கு அவன் ஒன்றும் கிருஷ்ண பரமாத்மா இல்லை. அற்ப புழு என்றுதான் நினைக்கத் தோன்றியது.

என்ன பேசாமல் இருக்கிறாய் அகில்? நீ இப்படியேதான் இருக்கப் போறியே, காலம் முழுக்க?

எப்படி...? நீ என்ன சொல்ல வாறாய் சங்கர்?

கல்யாணம் செய்யாமல், நெடுக அவையளுக்கு உழைச்சுக் கொட்டப் போறியே நீ? கேக்கிறன்.

போதும் நிறுத்து! இதை அம்மா கேக்க நேர்ந்தால் நொந்து போய் விடுவா. எங்களை வளர்க்கிறதுக்கு தன்னையே எரிச்சுத் தீக்குளித்து மீண்டு வந்தவளடா அவ. அது மட்டுமில்லை. அப்பாவாலையும் அவ சுகப்படேலை. மேலும் என்னைஒன்றும் தங்கத் தட்டில வைச்சு அவ வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கேல. இதுக்குக்கூட அவ என்ன பாடுபட்டிருப்பா. கையறு நிலையிலை இதை அவ சாதித்ததே இமாலய வெற்றிதான்.

உனக்குத் தெரியுமே சங்கர் ? ஒரு முறை லண்டன் போக, ஒரு இடம் வந்த போது, அதுக்கு தொன்னூறாயிரம் கட்டும்படி ஏஜென்ஸி கேட்ட போது ,,அவ அச்சுவேலிக்குப் போய் உன்ர மாமா தாசனிடம் அதைக் கேட்ட நேரம், அவர் சொன்னாராம். ஆரும் பொறுப்புக்கு, அதாவது பிணை நின்றால், தான் தருவதாகக் கூறினபோது, அம்மா உன்ர அப்பா பெரிய மாமா எல்லோரிடமும் போய்க் கேட்ட போதும், ஒன்றும் நடக்கவில்லை. எல்லோரும் கையை விரித்து விட்டார்களாம். ஏனென்றால் இதுக்கு பிணை நின்றால் சாட்சியாக நின்று கையெழுத்துப்போட்டால், பின்னர் நான் காசு அனுப்பாவிட்டால் குடியே மூழ்கிப் போய் விடுமல்லே அவையளுக்கு அவ்வளவு நம்பிக்கையீனம் என்னிடம். இப்ப கோடி கோடியாக சம்பாதித்து என்ர தங்கைகளை நான் கரை ஏற்றி விட்டிருக்கிறேனே! அவர்கள் ஏன் இதைப் பற்றி யோசிக்கேல? என்னவொரு சுயநலம் பார்! இதை அறியாமல் பேச வாற உன்னை, சவுக்காலை அடிச்சாலும் நீ திருந்துவியோ தெரியேலை.

இப்ப நான் சம்பாதிக்கிற காசு ஒன்றும் ஆகாயத்திலிருந்து தானாகக் கொட்டுண்டேலை. கடைசியாக வேறு வழியில்லாமல் அம்மா என்னைக் கப்பலுக்கு அனுப்பித்தான், கள்ள வழியிலை இறங்கி நான் இஞ்சை வந்தனான். நீ நினைக்கிற மாதிரி அம்மா ஒன்றும் நான் அனுப்புகிற காசை முன் வைத்து சொர்க்கத்திலை இருந்து, சுக போக வாழ்க்கை நடத்தேலை இதுக்கும் அவ கொடுத்து வைக்கேல. சவால்களை எதிர்கொண்டு எப்பவும் தீக்குளித்து எழுகிற வாழ்க்கைதான் அவவிற்கு. உனக்குத் தெரியுமே எனக்கொரு தங்கைச்சி இருக்கு. மனநிலை சரியில்லாதது. இதை வைச்சுக் கொண்டு அம்மா என்னபாடுபட்டிருப்பா.

இதெல்லாம் தெரிஞ்சுமா என்னை நீ கேக்கிறாய் இந்தக் கேள்வி? என் கல்யாணம் தள்ளிப் போறதுக்கு அவ தான் காரணமெண்டு, நீ நினைச்சியே! இந்தப் பாவம் உன்னைச் சும்மா விடாதடா. எப்பவும் உண்மை அறியாமல் பேசக் கூடாது. மனம் போனபடி பேசினால் கேள்வி கேட்டால் வீண் மன வருத்தம்தான் மிஞ்சும் இப்ப இதைக் கேட்ட பிறகு என்ர மன நிம்மதியே போச்சு என் கல்யாணத்துக்காக இப்பவும்தான் அவ நாயாய் அலையிறா. இது அவ குற்றமில்லை. வாற கல்யாணத்தை, பெண்ணின்ரை படம் பிடிக்கேலையெண்டு நான் தட்டிக் கழிக்கிறதாலை தான், இந்த நிலமை. இவ்வளவு நீதி பேசுறியே. உன்னை ஒன்று கேக்கிறன். பதில் சொல் பாப்பம். கொப்பாவை கொழும்புக்குப் போய் நீ ஒரு தடவை பார்த்து வரலாமே. பாவம் அனாதையாய் கிடந்து தவிக்கிறார் அங்கை. எனக்குத் தெரியும். இதைக் கேட்டால் உனக்குக் கோபம் வரும் சரியான பயந்தாங்கொளியல்லே நீ! இப்படித்தான் எங்கடை பக்கத்து நியாயமும் புரிந்துகொள் என்றான் அகிலன்.

அவன் கூறிய வேதம் பிடிபடாமல் அங்கு நிசப்தம் நிலவியது. ஓரளவாவது ஆன்மீக ஞானம் இருந்தாலொழிய, அதைப் புரிந்து கொள்வதே கஷ்டம்தான். சங்கரிடமிருந்து வெகு நாரமாகப் பதில் வரவில்லை. அகிலனால் கேட்கப்பட்ட கேள்வி, வாழ்வியல் பற்றிய தர்மசாஸ்திர விதிகளுக்குட்பட்டு எழுகின்ற ஒரு வேத பிரகடனமாகவே அங்கு ஒலித்த போதிலும், சங்கரைப் பொறுத்தவரை நெஞ்சில் குத்தி விட்ட முள்ளாகவே, அது உள்ளூர வலித்து விட்ட நிலையில், வாயடைத்துப் போன மௌனத்தில், மீண்டும் அவனிடமிருந்து பேச்சு வரவில்லை. அவன் பேசி, வெகு நேரமாகிறது. ஒரு யுகமே கடந்து சென்றது.

நீதியின் குரலுக்கு அடிபணிந்தவனாய் கனதியாகி விட்ட அவனின் அந்த மௌனமே, உண்மையைச் சொல்வது போலிருந்தது. அன்பு ஆளுமை கொண்டு வாழ்பவர்களே, தேவர்களாவர்.

சங்கர் போல் குணக் கோளாறு நடத்தை கொண்டு மனம் போனபடி வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசித் தீர்க்கின்ற ஒருவனை, வேறு எப்படி அழைக்க முடியும்? சாத்தான் என்று நினைப்பதைத் தவிர வேறு ■

# குறள் இன்பம் 28

செந்தமிழ்ச்செல்வர் பாடும்மீன் சு.ஸ்ரீகந்தராசா

**திருக்குறளின் காமத்துப்பால் இலக்கணம் வகுத்துள்ள காதல் இலக்கியத்தின் இனிமையைப் பகிர்ந்துகொள்ளும் கட்டுரைத் தொடர்.**

கருத்தொருமித்த காதலர்கள் ஒரே வீட்டில் ஒன்றாக உணவருந்தி, ஒரே படுக்கையில் துயில் கொண்டு, ஒருவருள் ஒருவராக இருவரும் கலந்துறவாடிக் களிப்போடு வாழ்ந்து வரும்போது, ஏதோ காரணத்திற்காகக் காதலன் காதலியை வீட்டில் விட்டுவிட்டு வேறிடம் சென்று தங்கவேண்டி வருவது இருவருக்குமே வேதனையைத் தரும். எனினும் வேறிடம், வேறு மனிதர்கள், வேலையில் கவனம் செலுத்துதல் முதலிய புறக் காரணிகளால் காதலியைப் பிரிந்த சோகத்தை மறந்திருக்கும் வாய்ப்புக் காதலனுக்குக் கிடைக்கிறது. ஆனால், வீட்டிலிருக்கும் காதலிக்கோ அவன் நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் மகிழ்ந்து இருந்த நினைவுகளை வீட்டில் இருக்கும் ஒவ்வொரு இடமும் ஒவ்வொரு பொருளும் நினைவுபடுத்திக் கொண்டிருக்கும். அதனால், பிரிந்து செல்லும் காதலர் தனக்குத் துன்பம் கொடுத்துவிட்டாரே என்று காதலி கோபம் கொள்ளுகிறாள். தனக்குத் துன்பத்தைத் தந்துவிட்டுத் தன் அழகை அவர் எடுத்துக் கொண்டு போய்விட்டார் என்று ஊடல் செய்கிறாள். தனது நோய் மற்றவர்களுக்குத் தெரியட்டும் என்று துணிந்து சொல்கிறாள். அப்படித் தெரிவதில் பெருமை கொள்கிறாள்.

இப்படியெல்லாம் காதல் நோயிலே காய்ந்து கிடக்கும் காதலியை இதுவரை கண்டோம். அவளின் இதய ஓட்டத்தின் இன்னும் சில காட்சிகளை அடுத்துவரும் குறள்களில் கண்டு இரசிப்போம்.



**<u>தழுவினால் நோய் வராது!</u>**
**<u>நழுவினால் நோய் விடாது!</u>**

சூரியன் மறைந்து, மறைந்து போகப் போக அந்த இடங்களில் இருள் விரைந்து விரைந்து சூழ்ந்து விடுகின்றது. விளக்கின் ஒளி குறைந்து குறைந்து மங்கிப் போகும்போது அங்கே இருட்டு நிறைந்து நிறைந்து சூழ்ந்துவிடுகிறது. அதேபோல, ஒருபெண்ணை அவளின் காதலன் இறுகத் தழுவிக் கொண்டிருக்கும்போது எந்த நோயும் இல்லாது இன்பத்தில் அவள் மிதந்திருப்பாள். அவனின் தழுவல் சற்றே நெகிழ்ந்து தளரத் தளர, அவளைத் தாக்கிய பசலை நோய் உடல் எங்கும் பரவிப் பரவி படர்ந்துவிடும். இந்த விடயத்தை, ஒருத்தி தன் தோழியிடம் சொல்வதை வெளிப்படுத்தும் குறள் இது.

**"விளக்ளற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்**
**முயக்கற்றம் பார்க்கும் பசப்பு" (1186)**

விளக்கு அற்றம் என்றால், ஒளி இல்லாமல் போவது என்று பொருள் கொள்ள வேண்டும். முயக்கு அற்றம் என்றால், இறுகத்தழுவிக் கொண்டிருந்த நிலையில் இருந்து நழுவிப் பிரிந்து செல்வது என்று பொருள் கொள்ள வேண்டும்.

"விளக்கின் திரியில் இருந்து ஒளி மங்கிக் குறைந்து குறைந்து செல்வதைப்பார்த்து அங்கே விரைவாகப் பரவி வருகின்ற இருட்டைப்போல, என்னுடன் நெருக்கமாயிருந்த என் கணவர் என்னைவிட்டுப் பிரிவதைப் பார்த்து, இந்தப் பசலையும் என் உடலில் பரவுகிறது" என்பது இதன் நேரடிக் கருத்து.

இவ்வாறு, இந்தக் குறள் ஓர் உதாரணத்தைக் காட்டி விடயத்தை எடுத்துச் சொல்ல, அடுத்த குறளோ அதை நேரடியாகவே ஓவியம்போல வரைந்து காட்டுகிறது.

**"புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில்**
**அள்ளிக்கொள் வற்றே பசப்பு" (1187)**

அவரைத் தழுவியபடி கிடந்தேன். பின்னர் சிறிது இடம்விட்டு விலகினேன். அவ்வளவுதான்! அதற்குள் அப்படியே என்னை அள்ளி எடுத்துக்கொண்டதே இந்தப் பசலை நோய்.

ஒளிவு மறைவின்றி, வெளிப்படையாகத் தன் நிலைமையைத் தோழியிடம் எடுத்துக்கூறும் இந்த வார்த்தைகளில், நோய் தாக்கிய செய்தி மட்டுமல்லாமல், தனது இன்பமான காதல் வாழ்வைப் பற்றிய பெருமித உணர்வையும் கலந்து அவள் வெளிப்படுத்துகின்ற விதம் சுவைத்து இன்புறத்தக்கது.

**<u>என்னைப் பேசாதோரும் இல்லை!</u>**
**<u>அவரைப் பேசுவோரும் இல்லை!</u>**

தன் கணவர் தன்னை விட்டுப் பிரிந்து சென்ற வேதனையை அனுபவித்துக்கொண்டிருக்கும் தனக்காக எவரும் வருந்துவதாகத் தெரியவில்லை. அவர் விட்டுச் சென்றதும் என்னால் பொறுத்திருக்க முடியவில்லையாம், அதனால்தான், அவர் சென்ற மறுகணமே எனக்குப் பசலை நோய் வந்துவிட்டதாம் என்றெல்லாம் என்னைப் பழித்துப் பேசுகிறார்கள். ஆனால், இத்தகைய ஒரு பெண்ணை விட்டுவிட்டுச் சென்றிருக்கிறாரே என்று அவரைக் குறை சொல்பவர்கள் யாரும் இல்லை.

இவ்வாறு, தன்மேல் குறை சொல்வதும் ஏழனப்படுத்துவதுமாக இருக்கின்ற மக்கள் யாரும் தனது நோய்க்குக் காரணமான தனது கணவர் மீது குற்றமோ, குறையோ சொல்லாமல் இருக்கிறார்களே என்று கவலைப்படுவதாகவும் வெறுப்படைவதாகவும் அவள் பேசினாலும் அந்த வார்த்தைகளுக்குள் மறைந்துகிடக்கும் அவளது உள்ளக் கிடைக்கையை நம்மால் அறிந்துகொள்ள முடிகின்றபோது குறளின் இன்பத்தில் நம்மால் மூழ்கிக்களிப்படையாமல் இருக்க முடியாது.

அவரை குறை சொல்பவர்கள் யாருமே இல்லை என்று சொல்வது, அவர் அவ்வளவு நல்லவராக இருப்பதால் யாரும் குறை சொல்லவில்லை என்று அவளது உள்ளம் பெருமைப்படுவதைக் காட்டுகிறது. அவர் சென்றதும் அவர் இல்லாமல் தன்னால் பொறுத்திருக்க முடியாமல் பசலை நோய் தனக்கு வந்துவிட்டது என்று மற்றவர்கள் பேசுவதெல்லாம் உண்மையில் பழிச்சொற்களல்ல, கணவர்மீது தான் கொண்டிருக்கும் ஆழமான காதலை உணர்ந்து கொண்டவர்களின் கேலிப் பேச்சுக்கள் மட்டுமே என்பதை அவள் நன்கு அறிந்துகொண்டுதான் பொய்யான கோபத்தில் பூக்கொண்டு எறிவதுபோல இப்படிக் கூறுகிறாள் என்பதும் மறைபொருளாக நமக்குத் தோன்றுகிறது.

எத்தனை அழகைத்தான் வைத்துப் பின்னியிருக்கிறார் திருவள்ளுவர்!

**"பசந்தாள் இவளென்ப தல்லால் இவளைத்**
**துறந்தார் அவரென்பார் இல்" (1188)**

அவர் சென்றதும் இவளுக்குப் பசலை நோய் வந்துவிட்டது என்று என்னைப் பழிகூறுவதன்றி, இத்தகையவளை விட்டுப் போயிருக்கிறாரே என்று அவரைக் குறை கூறுபவர் யாருமே இல்லை என்பது இதன் நேரடிக் கருத்து.

அவளின் உள்ளத்தில் உண்மையாக நிறைந்துள்ள எண்ணத்தை இதுவரையான குறட்பாக்கள் வெளிப்படுத்தியவற்றை மேலும் உறுதிப்படுத்தும் விதமாக அடுத்த இரண்டு குறட்பாக்களும் அமைந்துள்ளமை இந்த அதிகாரத்தின் மற்றுமொரு சிறப்பாகும்.

**<u>எவர் எப்ப டியும் பேசட்டும்! அவர் சொற்படி வந்து சேரட்டும்!</u>**

**"பசக்கமற் பட்டாங்கென் மேனி நயப்பித்தார்**
**நன்னிலையர் ஆவர் எனின்" (1189)**

நானும் உடன்படக்கூடிய வகையில் இதமாக என்னிடம் பேசி, என்னைச் சம்மதிக்க வைத்துப் பிரிந்துசென்ற என் கணவர், சென்ற நோக்கம் நல்ல வகையில் நிறைவேறி திரும்பி வருவாரென்றால் என் உடல் பசலை நிறம் அடையட்டும் பரவாயில்லை, என்பது இதன் நேரடிக் கருத்து.

**"பசப்பெனப் பேர்பெறுதல் நன்றே நயப்பித்தார்**
**நல்காமை தூற்றார் எனின்" (1190)**

"என்னையும் ஏற்றுக்கொள்ள வைத்துப் பிரிந்து சென்ற என் அன்புக்காதலர், இன்னும் திரும்பிவராமல் இருப்பதற்காக என்னில் அன்பில்லாதவர் என்று மற்றவர்கள் அவரைத் தூற்றாமல் இருப்பார்கள் என்றால், நானாகவே பசலை நோய்க்கு ஆளானவள் என்று பெயர் எடுப்பதில் தவறில்லை, நல்லதே!" என்பதே இந்தக் குறளின் பொருளாகும்.

இதுவரை காலமும் தன் கணவன் எந்நேரமும் தன்னோடு நெருக்கமாக இருந்தமையால், இன்பத்தில் மூழ்கியிருந்த மகிழ்ச்சியான நிலைமையையும் இப்போது அவர் பிரிந்து சென்றதால் அந்த நெருக்கம் இல்லாமையால் தன்னைப் பசலை என்ற துயரம் வாட்டுகின்ற துயரத்தையும் சீர்தூக்கிப் பார்க்கும் மனநிலையில் இருக்கும் ஒரு பெண்ணின் வாக்கு மூலங்களாகவே இந்தக் குறட்பாக்கள் அமைந்துள்ளன.

குடும்ப நலனுக்காக அவன் பிரிந்து செல்ல வேண்டியதன் அவசியத்தை அவளிடம் சொல்லி அவளைச் சம்மதிக்க வைத்தபின்னரே அவன் பிரிந்து சென்றான். கண்களில் கண்ணீர் சுரந்தாலும் மனம் மகிழ்ந்தே வழியனுப்பி வைத்தவள் அவள். பிரிவின் துயரைத் தாங்கமுடியாமல் எழுந்த எண்ண அலைகளால் என்னென்னவோ எல்லாம் பிதற்றினாள். ஆனாலும் அவன்மீது கொண்ட அன்பினால் அவன் வருவான், நல்வாழ்வு தருவான் என்பதில் அசையாத நம்பிக்கை அவளுக்கு இருப்பதை அவளின் ஏச்சிலும் பேச்சி லும் மூச்சிலும் இருப்பதை நாம் உணர்ந்துகொள் ளத்தக்க வகையில் அழகான சொற்களால் வள்ளுவப் பெருந்தகை வடித்துத் தந்துள்ளார். படித்து இன்புறுவோம்.

(தொடரும்)

# ஜீவ ஊற்று அன்பின் கரத்தின் தலைமை அலுவலகம் திறப்பு விழா

ஜீவ ஊற்று அன்பின் கரம் ஓர் சமூகப் பணி செய்யும் நிறுவனமாக நாடளாவிய ரீதியில் அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. இந்நிறுவனம் 2014 ஆம் ஆண்டில் ஓர் சிறு விதையாக ஆரம்பித்து 2017 ஆம் ஆண்டு சட்ட பூர்வமான அரசாங்க பதிவைப் பெற்று இயங்கும் நிறுவன மாகும். இன்று இலங்கையில் மட்டுமன்றி பல நாடுகளிலும் இதன் பணி பேசப்படுகிறது.

இலங்கையில் பல மாவட்டங்களில் வீட்டுத் திட்டங்கள், பெண் தலைமைத்துவத்திற்கு வாழ்வாதாரங்கள், நிவார ணங்கள், கல்வித்திட்டம், மருத்துவ உதவிகள் போன்ற அனைத்து விதமான பொதுச்சேவைகளையும் மக்களுக்கு வழுங்கி வருகிறது.

**இப்பணியின் பிரதான நோக்கம்**

நலிவடைந்தோருக்கான உதவிக்கரம் நீட்டல் ஆகும். ஆகவே, இதற்காக இனம், மதம் மொழி கடந்து மனி தத்தை அடிப்படையாகக் கொண்டு இப்பணி மக்களோடு மக்களாக மக்களுக்காகவே கடந்த எட்டு வருடங்களாக இயங்கி வருகிறது.

இது நிர்வாகக் கட்டமைப்பு கொண்டு இயங்கிவருகிறது.

**நிர்வாக உறுப்பினர்கள்**

தலைவர்
தயாளினி ஜோன்

உபதலைவர்
சிவசீலன்

செயலாளர்
பிரவீன்

பொருளாளர்
ஜெஸ்மன்

நிர்வாக உறுப்பினர்கள்
சுந்தர்
ராஜன்
ஜோசுவா

மாவட்ட தலைவர்கள்
சாயி (மட்டக்களப்பு)
திலீப் (மட்டக்களப்பு)
சஞ்சீவன்
(யாழ்ப்பாணம்)
அலெக்ஸ்
(திருகோணமலை)









# சம்மாந்துறை மசூறாவின் “நதிகளின் தேசிய கீதம்”

இக்பால் அலி

சம்மாந்துறை மசூறாவின் “நதிகளின் தேசிய கீதம்” கவிதைத் தொகுப்பின் எல்லாக் கவிதைகளும் பெண்களது உள் மனக் கொதிப்புக்களை சொல்லக் கூடியதாக அமைந்துள்ளது என்பதுதான் உண்மை. இந்தக் கவிதாயினியின் கணிசமானளவு கவிதைகள் பெண்கள் குறித்த அவலங்கள் பற்றிப் பேசுவதோடு மட்டுமல்ல அவர்களது மனவெழுச்சியை பரிசோதனை செய்வதாகவும் அமைந்துள்ளது. ஏற்றங்களும் இறக்கங்களும் பெருமையும் சிறுமையும் புயலும் தென்றலும் கலந்துள்ள அவர்களது வாழ்க்கை முறைமைகளையும் ஆணாதிக்க எதிர்ப்புணர்வும் பெண்ணியத்தை அடிப்படையாகக் கொண்ட கவிதைகள் மற்றும் நவீன ஆடம்பர சூழலின் மோகத்திற்கு உட்பட்டு சீரழிந்து சின்னாபின்னமாகிப் போய் நிற்கும் பண்பாட்டுச் சூழல்களை மறுசீரமைப்புச் செய்ய வேண்டிய விடயதானங்களும் பாடுபொருளாகக் காணப்படுகின்றன.

எனினும் நவீன பெண்ணிலைவாதிகள் என்று பேசப்படுகின்ற சில பெண் படைப்பாளிகள் முதுகு சொறியும் கவிதைகளாய் படைத்து தம்பெயருக்கு மகுடம் சூட்டுகின்றனர். ஆனால், கவிதாயினி மசூறா பெண்மைத்துவ மரபுகளுக்கு உட்பட்டு ஆடம்பர மோகங்களுக்கு எதிர்வினையாற்றும் வெடிகுண்டுகளாய் அவரது கவிதைகள் அமைந்துள்ளன. குறிப்பாக, மசூறாவின் இந்நூலில் காலத்தை வென்று நிற்கக் கூடிய பல கவிதைகள் உள்ளன. அவர் எடுத்துக் கொண்ட உள்ளடக்கமும் சொற்களும் வினைத்திறன் மிக்கவை. இந்தப் புரிதலோடு மசூறாவின் கவிதைகளை வாசிக்கும் போது பெருமளவு மனநிறைவை அளிப்பதாகவே உள்ளது.

நம்பிக்கையில்லாத உலகில் பிறந்து இதுதான் உலகம் மறுமையொன்று இல்லை. சுவர்க்கம் நரகம் ஒன்று இல்லை. நாம் நினைத்ததைச் செய்வோம். உள்ள அத்தனை கொடிய தீவினைகளை எல்லாவற்றையும் நேசித்து உலா வரும் மனிதப் பேய்களும் மனிதன் மிருகமாய் மாறி அவனால் மனிதத்துவத்திற்கு விடுக்கும் அச்சுறுத்தல்களும் வேரோடிக் கிடக்கும் வர்க்க முரண்பாடுகளின் விளைவாக இன்று நம்மைப் படைத்த இறைவனின் கட்டளைகளை மறந்து உலகம் உயிர்த்துடிப்பற்று ஓய்ந்து கிடக்கிறது. கவிதாயினி மனிதனைப் பற்றி கவிதை பாடுகின்றபோது இந்த உலகில் மனிதனால் இழைக்கப்படும் தீவினைகள் நம்மையறியாமல் காதுகளில் எதிரொலிக்கக் கேட்கின்றோம். எனவே நீ உனக்கு மரணம் வருமுன் மனிதப் புனிதனாக மாறிக் கொள் என்று எச்சரிக்கை விடுக்கின்றார் கவிதாயினி மசூறா.

**எதிர்கொள்ள**
**எப்போதும் தயாராகயிரு**
**அதற்கு முன் உன்னை**
**மனிதனாக மீட்டுக்கொள்**
**என்று இறைவனை மறந்து வாழும்**

மனிதர்களுக்கு கவிதாயினி மசூறா எம்மைப் படைத்த இறைவனைப் பற்றி நினைவூட்டுகிறார்.

நல்லவர்கள் போல் நடிப்பவர்களைப் பசுத் தோலை போர்த்திய புலி என்பார்கள். எவ்வளவு தான் ரோசாப் பூ அழகான காட்சி வடிவம் தந்தாலும் அதன் தண்டிலுள்ள முள் குத்தி காயத்தை உண்டு பண்ணி விடும். போலி உறவுகள் கொண்டு குற்றம் புரிபவர்கள் தொகை இப்போது அதிகரித்துள்ளது. இன்று குடும்பங்கள் மத்தியிலும் உண்மையான சகோதரத்துவ பாசவுறவுகள் வலுவிழந்து விட்டன. பழகினால் தேன் ஒழுகப் பழகுவார்கள். அவர்கள் உள்ளத்தில் இருப்பது விசம் என்று அறிந்து கொள்ள முடியாமல் பழகுவார்கள். சந்தர்ப்பம் வரும் போது அவர்களுடைய சுய புத்தியானது மிருக குணத்தைப் போல அப்படியே அப்பட்டமாக வெளிப்பட்டு விடும். எனவே யாரோடு பழகினாலும் பார்த்துப் பழக வேண்டும் என்பதை கவிதாயினி மசூறா இங்கிதமாக எடுத்துரைகின்றார்.

**அபாய விண்ணப்பம்**
**உள்ளே மிருகம் வளர்த்து**
**விலங்குகளின் சரணாலயம் நிறுவி**
**முகப்பில் பூங்காவனமென**
**அடையாளப்படுத்தும் போலி உறவுகள்.**

பட்டம் உயரப் பறப்பதற்கு அதற்கு கூஞ்சமும் வாலும் அவசியம். அப்பட்டம் வால் அறுந்து போனால் எங்கேயோ ஒரு மரத்தின் கொப்புகளில் சிக்கிக் கொள்ளும். உயரப் பறந்து செல்ல பட்டத்திற்கு வால் மிக முக்கியமானதொன்று. அது ஒன்றை ஒன்று பிரிக்க முடியாதது என்று கூறலாம். எனினும் கவிதாயினி மசூறாவின் கவிதை வரிகளில் உயர் பட்டங்களையோ பதவிகளையோ சலுகைகளையோ வரப்பிரசாதங்களைப் பெற்றுக் கொண்டு உயர் பதவி வகிப்பவர்கள் வெளியே சொல்லில் வீரராக இருப்பார்கள். ஆனால், செயலில் திறனற்றவர்களாக இருப்பார்கள். இவர்கள் தம் திறமையின் மூலம் முன் வந்தவர்கள் அல்லர். இவர்களுடைய செயற்திட்டத்தில் திறனும் இல்லை. செயற்திறன், நேர்மை, ஒழுக்கம் என்ற பண்புகளுமில்லை. கவிதாயினி நேர்மையும் மேன்மையும் மிக்க மனசுக்குரியவர். போலிகளை இனங்கண்டு அம்பலப்படுத்துகின்ற துணிச்சலும் கொண்ட ஆளுமைக்குச் சொந்தக்காரர்.

**உச்சாரக் கொப்புகளில்**
**கூடு கட்ட**
**ஆற்றல் தேவையில்லை**
**ஒரு வால் பிடிப்பு போதும்**

தகைமையற்றோர் பதவியில் இருப்பது பற்றிச் சிந்திக்கும் கவிஞரின் பொறுப்புணர்வு குறிப்பிடத்தக்கது.

இன்றைய சூழலில் பால் நிலை சமத்துவம் பொது இடங்களில் பேணப்படுவதில்லை. பொது இடங்களில் பெண்கள் நெருக்கடியான நிலைகளைச் சந்திக்கும் தருணம் அதிகம். பெண்கள் பல்வேறு வகையிலான இம்சைகளுக்கு ஆளாகிவருகின்றனர். அதிலும் உடம்பிலே மிகப் பெறுமதியான மாணிக்கங்களாக மதிக்கப்படும் பெண்களுடைய இரு கண்களும்கூட ஏகப்பட்ட இம்சைகளை எதிர்கொண்டுள்ளது. ஆடவர்கள் தன்னுடைய காமப் பார்வையால் பெண்களது உணர்ச்சியை தீண்டிவிடக் கூடியவர்கள் இருக்கின்றார்கள். எனவே இத்தகைய அசிங்கமான பார்வைகளைக் கொண்ட ஆண்களுக்கு எதிராகப் போராடுமாறும் அஞ்சிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. அவர்களுக்கு எதிராக மிரட்டி முறைத்துப் பார்த்து விழி பிதுங்கச் செய்யும் வேலைகளைச் செய்வதற்கு பெண்களைத் துணிந்தெழுந்து வருமாறு அழைப்பு விடுக்கிறார் கவிதாயினி மசூறா. போர்க்குணமிக்க கவிவரிகள் அவரிடம் இயல்பாகவே ஊற்றெடுத்து பொங்கிப் பெருக்கெடுத்து ஓடுகிறது. கவிதாயினி மசூறாவின் இக்கவிவரிகள் இந்நூலுக்கு முத்தாய்ப்பாகவும் அமைந்துள்ளது.

**நகப்பூச்சிகளில்**
**காலத்தை விரயமாக்காதே**
**நகங்களை கூர்மையாக வளர்த்துக் கொள்**
**காமுகர்களின் கண்களை**
**குத்திக் கிளித்துப் போட**
**கண்களுக்கு மை எதற்கு**
**நாய்களின் பார்வைகளை**
**இனங்கண்டு கொள்ள**
**ஊன் கண்களைப் பழக்கப்படுத்திக் கொள்**
**இறக்கைகளெனும்**
**பாதுகாப்பு அற்றபெண் குயில்கள்**

கூவ முடியாதிருக்கிறது என்று கவிதாயினி மசூறா கூறும் இக்கவிதை வரிகளானது பெண்களுடைய இன்றைய அவல நிலையை எடுத்துச் சொல்லக் கூடியதாக இருக்கின்றது.

இந்நூலில் மனிதம், பெண்ணியம், அறம், அழகியல், சமூகவியல் போன்ற பல்வேறுபட்ட அம்சங்கள் பேசப்படுகின்றன.

இந்நூலை ஆரம்பக் கல்வி ஆசிரியை திருமலர் பாக்கியம் காசிப்பிள்ளை (காரைதீவு) அவர்களுக்கு சமர்ப்பணம் செய்துள்ளார் நூலாசிரியர்.

“பெரும்பாலானவை பெண்ணியல் பேசுவதாக காணப்பட்ட போதிலும் அவர் ஒரு பெண்ணியல்வாதியல்ல என்பது எனது அபிப்பிராயம். இஸ்லாமிய கலாசார கட்டமைப்புக்குள் வாழும் ஒரு யதார்த்த சிந்தனையைக் கொண்டவர்.” என்று கல்முனை நால்வர் கோட்டம் கலாநிதி பரதன் கந்தசாமி இந்நூலில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

“என் கலாசாரத்தை மீறுவதாலும் பெண்ணியல்பை புதைப்பதாலும் புகழ்வருமெனின் எனக்கது தேவையுமில்லை. என் படைப்புக்களை வழிநடத்த எனக்கெந்த சாரதியுமில்லை. நான் தனித்துவமானவள். ஆனாலும் எதார்த்தவாதி” என்று நூலாசிரியர் பற்றி தீரன் ஆர்.எம். நௌஸாத் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி ரமீஸ் அப்துல்லாஹ் குறிப்பிடுகையில் “ஈழத்துப் பெண்களின் இலக்கிய முயற்சிகளுள் மசூறா ஏ.மஜீட்டின் முயற்சிகள் புறக்கணிக்கப் படமுடியாதவையும் வரலாற்றுப் பதிவுகள் பெறக்கூடியதுமாகும்.

அதே நேரம் பெண்கள் பற்றிய சமூகவியல் ஆய்வுக்கு, இவர் கவிதைகள் பெரிதும் உதவக் கூடியன. புல நோக்கிலும் பெண்ணின் அவஸ்தைகளை, உணர்வுகளை வெளிப்படுத்தியிருக்கிறார்.

தான் சார்ந்த சமூகத்தின் பிரச்சினைகளை வெளிப்படுத்துகின்ற போதும் அதனைப் பெண்ணின் குரலாகவே மசூறா காட்டியுள்ளார்” என்று அவர் தன் அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார்.

மசூறாவின் கவிதைப் பணிகள் இவ்வகையில் தொடர்வதற்கு எம் நெஞ்சார்ந்த வாழ்த்துகள்.



# கிளிநொச்சி எழுத்தாளர்களுக்கு அவுஸ்திரேலிய விருது

அவுஸ்திரேலியாவில் கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக இயங்கிவரும், விக்ரோரியா மாநிலத்தில் பதிவுசெய்யப்பட்ட அமைப்பான அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச் சங்கம், இலங்கை தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், இங்கே வெளியிடப்படும் தமிழ் நூல்களுக்கு பரிசு வழங்கும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி வருகிறது.

கடந்த 2019, 2020 ஆம் ஆண்டுகளில் தெரிவான நூல்களுக்கு பரிசுகளையும் சான்றிதழ்களையும் ஏற்கெனவே வழங்கியிருக்கும் இச்சங்கம், கடந்த 2021 ஆம் ஆண்டு வெளியாகி, இந்தப் போட்டிக்கு கிடைக்கப்பெற்ற நூல்களையும் நடுவர் குழுவின் மூலம் பரிசீலனை செய்து இம்முறையும் பணப்பரிசுகளையும் சான்றிதழ்களையும் வழங்கியது.

இலங்கை வந்திருந்த சங்கத்தின் நடப்பாண்டு செயலாளர் டொக்டர் நடேசன் தலைமையில், சங்கத்தின் உறுப்பினர் எஸ்.கிருஷ்ணமூர்த்தியின் வரவேற்புரையுடன் இந்நிகழ்வு கிளிநொச்சி பழைய ஆஸ்பத்திரி வளாகத்தில் அமைந்த சமூக மண்டபத்தில் கடந்த 25 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

இம்முறை சிறுகதை, கவிதை, கட்டுரை ஆகிய துறைகளில் மூன்று நூல்கள் போட்டியில் பரிசுக்காக தெரிவுசெய்யப்பட்டிருந்தன.

நாவல், மொழிபெயர்ப்பு துறைகளில் இம்முறை எந்த நூலும் பரிசுக்குரியதாகத் தெரிவாகவில்லை என்பது குறிப்பிடத்தகுந்தது.

வேப்பமரமும் பவளம் ஆச்சியும் என்ற சிறுகதைத் தொகுதியை எழுதிய விவேகானந்தனூர் சதீஸ் சார்பில் பரிசுத்தொகை ஐம்பதினாயிரம் ரூபாவையும் சான்றிதழையும் அவரது தாயார் செல்லையா பவளவள்ளி பெற்றுக் கொண்டார்.



எழுத்தாளர் விவேகானந்தனூர் சதீஸ் கடந்த பலவருடங்களாக அரசியல் கைதியாக சிறையிலிருந்து பொது மன்னிப்பின் கீழ் தற்போது விடுதலையாகியிருப்பவர் என்பது குறிப்பிடத்தகுந்தது. எனினும் சில சட்ட விதிமுறைகளினால், அவரது வருகை தாமதமடைந்தமையினால், அவரின் தாயார் பெற்றுக்கொண்டார். இவருக்கான பரிசு மறைந்த மூத்த எழுத்தாளர் தெணியான் அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது.

கவிதைத் துறையில் எழுத்தாளர் சி.கருணாகரன் தனது கடவுள் என்பது துரோகியாயிருத்தல் என்ற நூலுக்காக ஐம்பதினாயிரம் ரூபாவையும் சான்றிதழையும் பெற்றுக்கொண்டார். இந்தப்பரிசு அமரர் திலகவதி சிவகுருநாதன் அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது.

கட்டுரைப் பிரிவில் மன்னார் மாதோட்டப் புலவர்கள் - கலைஞர்கள் என்ற நூலை எழுதிய அருட்திரு.தமிழ்நேசன் அடிகளார் ஐம்பதினாயிரம் ரூபாவையும் சான்றிதழையும் பெற்றுக் கொண்டார்.

குறிப்பிட்ட பரிசுத்தொகைகளை அவுஸ்திரேலியாவில் வதியும் எழுத்தாளர்கள் லெ.முருகபூபதி (எழுத்தாளர் (அமரர்) தெணியான் நினைவுப் பரிசு) ரோய் லெம்பேட் (கலைஞர் அமரர் தொபி யாஸ் மக்சிமஸ் லெம்பேட் நினைவுப் பரிசு) எழுத்தாளர் திருமதி.சகுந்தலா கணநாதன் (அமரர் திலகவதி சிவகுருநாதன் நினைவுப்பரிசு) ஆகியோர் வழங்கியிருந்தனர். ■

---



## பிரித்தானியாவுக்கான இலங்கை பிரதிநிதியாக
# கந்தையா கஜன் நியமனம்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் வர்த்தகரான கந்தையா கஜன் முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் பிரித்தானியாவுக்கான இலங்கை பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக் கடிதத்தை இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம கடந்த செவ்வாய்க்கிழமை (பெப்ரவரி 28) வழங்கினார். வடக்கு கிழக்கில் முதலீடுகளை முன்னெடுத்து அபிவிருத்தி செய்யும் நோக்கில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய சபோல்க் பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகம் தொடர்பில் முதுகலை பட்டப்படிப்பை நிறைவு செய்துள்ள இவர் வணிகம் மற்றும் தொழில்நுட்பத்தில் மிகுந்த அர்ப்பணிப்புடன் தனது திறன்களை வெளிப்படுத்தி வருகிறார். வணிக அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் தொடர்பில் நீண்ட அனுபவமுள்ள கஜன், பல்வேறு திட்டங்களின் மூலம் இலங்கை நிலையான வளர்ச்சியை அடைய வேண்டும் என்பதில் தீவிர ஆர்வம் காட்டி வருகிறார்.

எரிசக்தி, நகர மேம்பாடு, கனிம வளங்கள் ஆகியவற்றிற்காக முதலீட்டாளர்களை ஒருங்கிணைத்தல் மற்றும் இலங்கையில் கல்வித்துறை, விவசாயத் துறை மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான அபிவிருத்திகளையும் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் ஊடாக இலங்கையில் விவசாய கால்நடைவளர்ப்பு தொடர்பான பல அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தும் திட்ட முகாமையாளராகவும் இவர் இலங்கையில் செயற்பட்டு வருகின்றார். கல்விசார் அபிவிருத்திகளையும் அது தொடர்பான வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் இளைஞர் யுவதிகளை ஊக்குவிக்கும் பல திட்டங்களையும் மேற்கொண்டு வருகிறார். இங்கிலாந்து உட்பட உலகில் ஏனைய நாடுகளிலிருந்து முதலீட்டாளர்களை ஈர்க்கும் அவா அவருக்குள்ளது குறிப்பிடத்தக்கது. பல சர்வதேச நிறுவனங்களின் வணிக முகாமையாளரான இவர் பல்வேறு கலாசார அமைப்புகளின் ஸ்தாபகராகவும் பிரதான நிறைவேற்று அதிகாரியாகவும் இலங்கை நொதர்ன் கம்பஸின் பிரதான நிறைவேற்று அதிகாரியாகவும் பணியாற்றி வருகிறார். ■

# இயற்கை வழி சந்தை Organic food market

**இயற்கை உருளை, இராசவள்ளிக் கிழங்கு**
யாழ்ப்பாணத்தில் இயற்கை வழி முறையில் உற்பத்தி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு, இராசவள்ளிக் கிழங்கு என்பன இராவணா பண்ணையில் இந்த வாரம் முதல் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு பிரசாத் - 0770076223

**இயற்கை தேன்**
இயற்கை முறையில் கலப்படம் இல்லாமல் உற்பத்தி செய்யப்பட்ட தேன் கிடைக்கும். மதுரம் தேனீப்பண்ணை, காரை நகர்.
தொடர்புகளுக்கு நிரோஷன் - 0775789342

**மருத்துவ செவ்வாழை**
மிகவும் மருத்துவ குணம் உள்ள முற்றுமுழுதாக இயற்கை விவசாய முறையில் உற்பத்தி செய்யப்பட்ட செவ்வாழைப்பழம் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு கோகுலன் - 0779797402

**இயற்கை மரக்கறி வகைகள்**
இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறி வகைகளை பெற்றுக் கொள்ள உசன் ராமம் இயற்கை விவசாய பண்ணையை தொடர்பு கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு பவன் - 0764447778




# போராட்டத்தில் ....

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அவர்களில் ஒருவர்தான் அன்றைய அருட் பிதா. சின்னராசா. பத்திரிகைகளில் வந்த வண. சிங்கராயரின் உரைகள், பிரசங்கங்கள் தொடர்பாக நோட்டம் விட்ட அன்றைய இரகசியப் பொலிஸார் அவரது அறையைச் சோதனையிட்டபோது ஏனைய "பாதர்மாரின்" வங்கி ரசீதுகள் கைப்பற்றப் பட்டன.

சிங்கராயர் குருநகர் வதை முகாமில் விசாரிக்கப் பட்டார். விசாரித்த அதிகாரி நேரே ஆயரிடம் வந்து "கொலைகளும் இணைந்த கொள்ளை ஆயர்!" என்று சொன்னாராம்.

குருமார்களைக் கைது செய்ய வேண்டாம் எனவும் அவர்களைத் தாமே கொண்டு வந்து நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதாகவும் அன்றைய யாழ் ஆயர் தியோகுப்பிள்ளை விடுத்த கோரிக்கையை ஆட்சிப் பீடம் ஏற்கவில்லை. குருமார் நால்வரும் கைது செய்யப்பட்டனர்.

பிணையில் பின்னர் விடப்பட்டபோது ஒருவர் வெளிநாடு சென்று தொழில் நிமித்தமாக வேறு ஒரு கிறிஸ்தவ சபையில் "பாஸ்டர்" ஆனார்.

மற்றவர் குற்றமற்ற நிலையிலோ எனனவோ விடுதலையானார். வண பிதா சிங்கராயரும் சின்னராசாவுமே சிறைத் தண்டனையை அனுபவித்தனர்.

வெலிக்கடை இனக் கோரத்தைத் தொடர்ந்து, மட்டுநகர் சிறைக்கு கைதிகள் மாற்றப்பட்ட பின்னர், அங்கிருந்து மீண்டும் வெலிக்கடைக்கு மாற்றப்படுவார்கள் என்ற செய்திகள் வந்தபோது கைதிகள் இயக்கங்களால் கடத்தப்பட்டு இந்தியாவுக்கு அனுப்பப்பட்டனர்.

'பாதர்' சிங்கராயர் மட்டுமே அவர்களுடன் போகாமல் இருந்தார். செய்திகளில் வந்தது போல அவர் மீண்டும் வெலிக்கடைக்கு மாற்றப்பட்டார்.

சின்னராசா அவர்கள் இந்தியா சென்று பின்னர் கனடாவுக்குப் புலம் பெயர்ந்தார்.

இவை இன்றைய நாளில் இவரை அறியாதவர்களுக்காக பதியப்படவேண்டிய தகவல்களே.

இன்று நாம்தான் போராளி. மற்றவர்கள் துரோகி. நாம்தான் போராட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் என முழங்குபவர்களும் வெலிக்கடை, யாழ்.நூலகம், தமிழாராய்ச்சி மாநாடு என்பனவற்றைப் பேசி அரசியல் நடத்துபவர்களும் இளம் ஊடகர்கள் பலரும் கடந்த காலங்களைப் பற்றிய தேடல்களை அவற்றை அறிந்தவர்களிடம் கேட்டுத் தெரிவது என்பது இன்றைய நாளில் மிகவும் அவசியம்.



வெலிக்கடையில் கொலையாளிகளை எதிர்க்கும் போதும் மட்டக்களப்பில் கைதிகளைக் கடத்தும் போதும் "ஒற்றுமை" என்ற சொல் எங்கிருந்தோ வந்து எம்மவரை இறுகப் பற்றியிருந்தது மெய்.

அமரர் சின்னராசா இறுதிவரை சமூகத்தின் நலனுக்காக பல நற்காரியங்களைச் செய்து வந்துள்ளார்.

தாயகத்தையும் புலம்பெயர் மக்களையும் பிணைத்து வைத்திருக்கும் முக்கிய பணியைப் பல பரிமாணங்களில் செய்து நிறைவேற்றியுமுள்ளார். கனடாவில் பல மூத்தவர்களுக்கு கிறிஸ்தவ வேதாகமத்தில் பேசப்படும் இடங்களைக் காட்டும் பணியில் தமது மொழியறிவையும் வேதாகம அறிவையும் பயன்படுத்தியுள்ளார்.

அமரர் சின்னராசா பற்றிய எனது முகநூல் பதிவுக்கு மூத்த ஊடகவியலாளர் டி.பி.எஸ்.ஜெயராஜ் அண்ணர் இட்ட பின்னூட்டத்தின் இறுதியில் குறிப்பிட்ட "பைபிள்" வசனம் இது:-

"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன் என் ஓட்டத்தை முடித்து விட்டேன். விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" (திமோதி 7: 4-1) ஆம். நான் இப்பத்தியின் தொடக்கத்தில் குறிப்பிட்ட விசுவாச வாழ்வை தமது வாழ்வின் நெறியாகக் கொண்டு, தமது போராட்டத்தை வென்று, தாம் வணங்கிய இறைவனின் கிரீடத்துக்காக இப்போது காத்திருக்கிறார்- என்று நம்புவோமாக! ■

# பொக்கிஷங்களில் ஒன்றான "கல் ஓயா தேசிய பூங்கா"

இலங்கையின் தென்கிழக்கில் அம்பாறைக்கு மேற்கே அமைந்துள்ளது கல் ஓயா தேசிய பூங்கா. இயற்கையாக உருவான பொக்கிஷங்களில் ஒன்றாகும்.

1954 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 1954 முதல் 1965 வரை கல்லோயா அபிவிருத்தி சபையால் இவ்வனம் நிர்வகிக்கப்பட்டது. பின்பு வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தினால் பொறுப்பெடுக்கப்பட்டது.

கல்லோயா தேசிய பூங்கா இலங்கையின் தலைநகர் கொழும்பிலிருந்து 314 கி.மி தூரத்தில் அமைந்துள்ளது. சேனநாயக்க சமுத்திர நீர்த்தேக்கத்தின் நீர்ப்பிடிப்புப் பகுதியைப் பாதுகாப்பதற்காக கல் ஓயா தேசியப் பூங்கா ஆரம்பிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது. இலங்கையின் அழகிய இயற்கைக் காட்சிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது இப்பகுதி படகு மூலம் சவாரி செய்யக்கூடிய இலங்கையின் ஒரே தேசிய பூங்காவாக காணப்படுகின்றது.

தினந்தோறும் காலை 6 மணிக்கு திறக்கப்பட்டு மாலை 6 மணி வரை சுற்றுலாப் பயணிகள் பார்வையிட முடியும். கல் ஓயா தேசிய பூங்காவிற்கான நுழைவுக் கட்டணமாக உள்நாட்டு சுற்றுலாப் பயணி ஒருவருக்கு 60 ரூபாயும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணி ஒருவருக்கு 12 டொலர்களும் அறவிடப்படுகின்றது.

25,900 ஹெக்டேர்களுக்கு மேல் பசுமையான காடுகளும் மற்றும் திறந்த சவனங்கள் சேனநாயக்க சமுத்திர ஏரியுடன் இணைந்து செழித்து காணப்படுகின்றன. கல் ஓயா தேசிய பூங்காவில் சுமார் 45% காடுகளாகவும் 33% சவன்னாவாகவும் 9% புல்வெளிகளாகவும் 2% சேனாவாகவும் உள்ளன.

பூங்காவின் சுமார் 10% நீர்நிலைகளைக் கொண்டுள்ளது. காடுகள் நிறைந்த பகுதிகள் பொதுவாக பசுமையானவை மற்றும் அடர்த்தியான மூடிய விதான அடுக்குடன் நடுத்தர உயரம் கொண்டவை. பெரும்பாலும் பூங்காவின் மேற்கே காணப்படும் சவன்னாவில் அழகான மர இனங்கள் உள்ளன மேலும் நிலத்தடி தாவரங்கள் உயரமான புற்களைக் கொண்டுள்ளது. புல்வெளி மண்டலம் பெரும்பாலும் நீர்நிலைகளைச் சுற்றிக் காணப்படுகின்றது.

நமது கிரகம் பார்ப்பதற்கு ஒரு அதிசயம். இருப்பினும், உண்மையான இயற்கையை அனுபவிக்க பூமியில் குறைவான இடங்கள் உள்ளன. உலகத்தை அது என்னவென்று பார்க்க வேண்டும்.



எஸ்.ஐ.எம்.நிப்ராஸ்

கல் ஓயா தேசியபூங்கா அந்த இடங்களில் ஒன்றாகும். இலங்கையின் மிகப்பெரிய உள்நாட்டு நீர்நிலைகளில் ஒன்றான சேனநாயக்க சமுத்திரத்துடனான நீரின் மேற்பரப்பு தீவுகளால் நிரம்பியுள்ளது.

கட்டடங்கள் இல்லை, போக்குவரத்து நெரிசல் இல்லை, இது ஒரு அமைதியான இடம், அதைச் சுற்றியுள்ள அனைத்தும் சுற்றுலாப் பயணிகளுக்கு மன அமைதியையும் ஆறுதலையும் அளிக்கின்றது.





கல் ஓயா தேசிய வனத்தில் முக்கிய விடயமாக அதிகமான யானைக் கூட்டத்தைக் குறிப்பிடலாம். மூன்று முக்கிய ஆயுர்வேத மருத்துவ மூலிகைகளான கடுக்காய், தான்றி, நெல்லி என்பவற்றுடன் ஏனைய தாவரங்களும் இங்கு ஓங்கி உயர்ந்து காணப்படுகின்றன.

மேலும், இப்பகுதியில் காணப்படும் சேனநாயக்க சமுத்திரத்தில் யானைகள் நீந்தி சமுத்திரத்தை கடக்கும் அரிய காட்சிகளைக்கூட இங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் கண்டு ரசிக்க முடியும். நீங்கள் இங்கே லாங்கூர், டோக் மக்காக், சிறுத்தை, சோம்பல் கரடி, காட்டுப்பன்றி, நீர் எருமை மற்றும் மான் உள்ளிட்ட 32 வகையான பாலூட்டிகளின் தாயகமாகும். மேலும் என்னவென்றால், ஏறக்குறைய 150 வெவ்வேறு வகையான பறவைகள் மேலே வானத்தை அலங்கரிப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது, அது மாத்திரமின்றி பறவைகள் சமுத்திரத்தில் நீர் அருந்தும் காட்சிகளும் மீன்களை வேட்டையாடும் அரிய காட்சிகளையும் சில சந்தர்ப்பங்களில் அவதானிக்க முடியும்.

சேனநாயக்க சமுத்திரா ஏரியின் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள படகுச் சவாரி நீங்கள் ஈடுபடும் போது அமைதியான நீரின் மீது நீங்கள் புறப்படும் போது கல் ஓயா தேசிய பூங்கா உயிர்களால் நிறைந் திருப்பதை நீங்கள் விரைவில் அவதானிப்பீர்கள்.

கல் ஓயாவில் உள்ள பறவைகளில் ஐபிஸ், கார்மோரண்ட், ஈக்ரெட்ஸ், கழுகுகள் மற்றும் பல உள்ளன. வேதா பழங்குடியினரும் கல் ஓயாவில் வசிக்கின்றனர் அவர்களுடன் தொடர்பு கொள்ளவும் அவர்களின் வாழ்க்கை முறை மற்றும் பூங்கா பற்றிய நுண்ணறிவுகளைப் பெறவும் உங்களுக்கு வாய்ப்பு வழங்கப்படலாம். வனாந்தரத்தில் ஒரு இரவு தங்க விரும்பும் எவருக்கும் பூங்காவில் சில விசேட முகாம்கள் வழங்கும் ஏற்பாடுகளும் உள்ளன.

குறிப்பாக, நீங்கள் இந்த சுற்றுலாவை மேற்கொள்ள விரும்பினால் அங்குள்ள சுற்றுலா வழி காட்டியின் உதவியுடனே மேற்படி பூங்காவை முற்று முழுதாக சுற்றிப் பார்க்கவேண்டும். அவர்களுக்கு அது தொடர்பான பரிபூரணமான அறிவும் ஆபத்துகளில் இருந்து சுற்றுலாப் பயணிகளைப் பாதுகாக்கும் வழிமுறையும் அனுபவமும் அவர்களிடம் காணப்படும் மேலும் இங்கு காணப்படும் அறிவுறுத்தல்களையும் சுற்றுலா பயணிகள் முறையாகப் பின்பற்றுதலும் மிகவும் அவசியமாகவும் காணப்படுகின்றது

ஆகவே, நீங்களும் ஒரு தடவையாவது கல் ஓயா தேசிய பூங்காவைப் பார்வையிட சந்தர்ப்பம் அமைந்தால் நிச்சயமாக உங்களுடைய சுற்றுலாப் பயணத்தை திட்டமிட்டு உங்கள் பயணத்தை சிறப்பாகவும் சந்தோசமிக்கதாகவும் மாற்றிக் கொள்ளுங்கள்.

மேலும் தங்களது பயணம் இலகுவாக அமைத்துக் கொள்ள தேசியபூங்காவின் +94632242002 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி தங்கள் பயணங்களை இலகுபடுத்திக் கொள்ளுங்கள். ■

---

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

# உள்ளூராட்சி.....

நீடிப்புக்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இலங்கை இதுவரை சந்தித்திராத மோசமான பொருளாதார நெருக்கடி நிலவுவதால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அரசாங்கம் படுதோல்வியை சந்திக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் அரசாங்கம் இயங்குகிறது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு எதிராக பொது மக்கள் கடும் கொந்தளிப்பில் உள்ளார்கள்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து அதற்கான தடைகளும் பின் தொடர்ந்தன. உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு எதிராக ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி வழக்குத் தாக்கல் செய்தார். உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வைப்புத்தொகையை ஏற்க வேண்டாம் என மாவட்டச் செயலாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. பிரச்சினை பூதாகாரமானதால் கட்டுப்பணம் வாங்கவேண்டாம் என அனுப்பிய கடிதம் மீளப் பெறப்பட்டது. மக்களின் அதிருப்தியை அடுத்து அந்தக் கடிதம் மீளப் பெறப்பட்டது. தேர்தலுக்கு 27 மில்லியன் அமெரிக்க டொலர் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழு பல முறை கோரிக்கை விடுத்தும் நிதி அமைச்சு தேவையான நிதியை வழங்கவில்லை.

நிதியை விடுவிக்காமல் அரசாங்கம் தேர்தலை நடத்த விடாமல் தடுக்கும் என்று அஞ்சிய எதிர்க்கட்சிகள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தரவிடுமாறு வலியுறுத்தி நீதிமன்றத்திற்குச் சென்றன.

"தேர்தலை நடத்தத் தயாராக உள்ளோம்" என்று தேர்தல் ஆணையம் நீதிமன்றங்களுக்குத் தெரிவித்ததையடுத்து, அத்தகைய உத்தரவை வழங்க வேண்டிய அவசியமில்லை என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

இந்த முடிவை எதிர்க்கட்சிகள் மகிழ்ச்சியுடன் வரவேற்றன. எவ்வாறாயினும் சில நாட்களுக்குப் பின்னர், முற்கூட்டியே பணம் செலுத்தாமல் தேவையான வாக்குச் சீட்டுகளை அச்சிட முடியாது என அரசாங்க அச்சக அதிகாரி கங்கானி லியனகே தெரிவித்ததால், தேர்தலை ஒத்திவைக்க வேண்டியுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு அறிவிக்க வேண்டியிருந்தது. இதற்கு முன்பு இந்த நடைமுறை இல்லை, தேர்தல் கண்காணிப்பாளர்கள் இந்தத் தடைகளுக்கான பழியை நேரடியாக அரசாங்கத்தின் மீது சுமத்தியுள்ளனர். தேர்தலை குறைமதிப்பிற்கு உட்படுத்த அரசாங்கம் பயன்படுத்தும் பல வழிமுறைகளை இங்கும் காணலாம்.

தேர்தலை நடத்துவதற்கு திறைசேரியில் பணம் இல்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது. இது ஒரு புதுமையான காரணமாகும். இதற்கு முன்னர் பணம் கொடுத்துத்தான் தேர்தல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதாக வரலாறு இல்லை. தேர்தலை ஒத்தி வைப்பது அல்லது நடத்தாமல் காலம் கடத்துவது வெற்றிகரமான நடவடிக்கையாக அரசாங்கத்திற்குத் தோன்றலாம்.

தேர்தலை நடத்தாத அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் அரசியல் ரீதியாக போராட்டம் நடத்துவது மேலும் வலுப்பெற வாய்ப்புள்ளது. காவல் துறையினரின் போராட்டங்களின் எதிர்வினைகள் நாளுக்கு நாள் கடுமையாக அதிகரித்து வருகின்றன. அரசாங்கத்தின் அடக்குமுறை மற்றும் தேர்தலை நடத்த மறுப்பது குறித்து சர்வதேச ஊடகங்களில் வெளியான செய்திகள் சாதகமாக இல்லை. சர்வதேச ஊடகங்களில் பல செய்திகள் "வங்குரோத்து இலங்கை தேர்தலை ஒத்திவைக்கிறது" என்று தலைப்புச் செய்தியாக வெளியானது. தொடர்ந்து பின்னடைவைச் சந்தித்து வரும் சர்வதேச நாணய நிதியம் தனது கடனை வழங்குவதற்காக அரசாங்கம் காத்திருக்கிறது. தேர்தல் ஊசலாடுவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். ■



# சிவப்பு மண் பிட்ச், கறுப்பு மண் பிட்ச் எவை? எந்த பிட்ச் இல் பந்து பவுன்ஸ் ஆகும்?

இந்தியாவில் மாறிவரும் மக்கள்தொகை புள்ளி விபரம் போல மைதானங்களில் உள்ள பிட்ச்களும் மாறிய வண்ணம் உள்ளன. சிவப்பு மண் பிட்ச் (ஆடுகளம்) பெரும்பாலும் தென்னிந்திய மைதானங்களில் ஆதிக்கம் செலுத்தினால், வடக்கில் கறுப்பு மண் விரும்பத்தக்க ஒன்றாக உள்ளது. அதே மேற்கில் பவுன்ஸ் ஒரு காரணியாக இருந்தாலும் கிழக்குப் பகுதிகளில் தாழ்வான மேற்பரப்புகள் (பந்துகள் குத்தி குறைவான தூரத்துக்கு எழும்புவது) துடுப்பாட்ட வீரர்களுக்குச் சவால் விடும்.

சென்னை எம்.ஏ.சிதம்பரம் ஸ்டேடியம் (சேப்பாக்கம்), பெங்களூர் எம்.சின்னசாமி, மும்பை வான்கடே ஆகியவற்றில் ஒரு பிரதான ஆடுகளங்களாக சிவப்பு மண் உள்ளன. இதில் தேய்மானம் ஏற்பட ஆரம்பித்ததும் ஐந்து நாட்களும் டெஸ்ட் நீடித்தால், அது ஃபுல் லெந்த் பகுதியைச் சுற்றி ஏராளமான கரடுமுரடான திட்டுகளுடன் கூடிய, பாரிஸில் இருக்கும் சிவப்பு மண் டென்னிஸ் ஆடுகள (ரோலண்ட் கரோஸ் ஆடுகளம்) மேற்பரப்பைப் போலவே முடிவடையும். சிவப்பு மண்ணின் ஆடுகளங்களில் பொதுவாக அதிக பவுன்ஸ் இருக்கும். இதனால் சுழற்பந்து வீச்சாளர்கள் பந்துவீசுவதை ரசித்து வீசுவார்கள். மேலும், அடிக்கடி விக்கெட்டுகளை கைப்பற்றியும் நெருக்கடி கொடுத்தும் வருவார்கள். ஆடுகளத்தில் போதுமான அளவு தண்ணீர் பாய்ச்சப்படாவிட்டால், சிவப்பு மண் ஆடுகளங்கள் வேகமாக நொறுங்கி, பேட்ஸ்மேன்களுக்கு நீண்ட நேரம் தாக்குப்பிடிக்க மிகவும் சவாலானதாக இருக்கும்.

டெல்லி பெரோஸ் ஷா கோட்லா, பஞ்சாப் மொஹாலி மற்றும் கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானங்களில் கறுப்பு மண் ஆடுகளங்கள் உள்ளன, இங்கு களிமண் பயன்படுத்தப்படுவதால் பவுன்ஸ் குறைவாக இருக்கும். தண்ணீர் பாய்ச்சப்படும் போது, அது மேற்பரப்பை நீண்ட நேரம் ஒன்றாக வைத்திருக்கும் மற்றும் பேட்ஸ்மேன்கள் பொதுவாக இதுபோன்ற சூழ்நிலைகளில் விளையாட மகிழ்ச்சியடைவார்கள். போட்டியிலிருந்து வெளியேறுவதற்கு, கியூரேட்டர்கள் பெரும்பாலும் அதில் இருக்கும் சிறிய புல்லை விட்டுவிடுவார்கள் அல்லது ஒரு டெஸ்டுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு தண்ணீர் கொடுப்பதை நிறுத்திவிடுவார்கள். இந்த ஆடுகளங்கள் மாறாத பவுன்ஸ்கூட கொடுக்கலாம். இதுபோன்ற ஆடுகளங்களில் இரண்டாவது சீசனிலும் பந்து பழையதாகும்போதும் பேட்டிங் செய்வது எளிதாகிவிடும். மேலும் கறுப்பு மண் ஆடுகளங்கள் வெவ்வேறு பகுதிகளில் வித்தியாசமாக செயல்படும். உதாரணமாக வங்கதேசத்தில் உள்ள கறுப்பு மண் ஆடுகளங்கள் இந்தியாவில் உள்ளதைவிட மெதுவாக உள்ளன. ஏனெனில், அங்கு குறைந்த நீர் கொடுக்கப்படுகிறது.

இங்கே இது சுவாரஸ்யமானது. கியூரேட்டர்கள் கற்பனைத்திறன் கொண்டவர்களாக இருப்பதோடு, ஒரு விவசாயி தனது விவசாயத்தை எப்படி நடத்துகிறாரோ அதைப் போலவே ஸ்கொயரை அடிக்கடி நடத்துகிறார்கள். இந்தச் சோதனையின் போது என்ன வகையான பொருட்கள் கலக்கப்படுகின்றன மற்றும் அது என்ன வழங்குகிறது என்பது அவர்களுக்கு மட்டுமே தெரியும். இது ஒரு ரகசிய செய்முறையாகும், எதிரணிகள் அதைக் கண்டுபிடிக்கத் திணறுவார்கள். நேற்று திங்களன்று என்ன வகையான பிட்ச் இருந்தது என்பது கலவையான உணர்வுகள். சிலர் ஆடுகளத்தில் உள்ள சிவப்புத் திட்டுகளை மேற்கோள் காட்டி இது சிவப்பு மண் ஆடுகளம் என்று கூறினார்கள். ஆடுகளத்தைப் பார்க்கும் பாக்கியம் பெற்ற மற்றவர்கள் அது கறுப்பாக இருக்கிறது என்றார்கள். ஆனால், அங்கு இருப்பது சிவப்பு மற்றும் கறுப்பு மண்ணின் கலவையாகும்.

இது வாடிக்கையான ஒன்றுதான். இது இந்தியாவிற்கு என பிரத்தியேகமாக தயார் செய்யப்பட்டது அல்ல. மைதான ஊழியர்கள் இரண்டின் கலவையை விரும்புகிறார்கள். ஏனெனில் கோடைகாலம் தொடங்குவதால், கறுப்பு மண் ஆடுகளத்தை நீண்டநேரத்திற்கு ஒன்றாக வைத்திருக்கும் என்று அவர்கள் நம்புகிறார்கள். நேற்று ஆடுகளம் நீர் பாய்ச்சப்பட்டதாகக் கூறப்படும் செய்திகளும் உள்ளன. அதாவது அது சிவப்பு மண் ஆடுகளத்தைப் போல விரைவாக நொறுங்காது.

“அது சிவப்பு மண்ணா, கறுப்பு மண்ணா, ஊதா மண்ணா இருந்தாலும் பரவாயில்லை. ஒரு பிட்சை உருவாக்குவது இந்த அனைத்து பொருட்களின் கலவையாகும். சிவப்பு மண், சூரிய ஒளியில் இருப்பதால், விரைவாக உடைந்து விடும். அதை அப்படியே வைத்திருக்க ஏதாவது தேவை என்று நாங்கள் உணர்ந்தால் கறுப்பு மண்ணைப் பயன்படுத்தி இருக்கிறோம். அதை அவற்றால் வழங்க முடியும் என்று நம்புகிறோம்.

மேலும் இதுபோன்ற சந்தர்ப்பங்களில், மேல் அடுக்கு (இந்தூரில் மேல் அடுக்கு சிவப்பு மண்) அப்படியே இருக்கும் வரை பவுன்ஸ் இருக்கும், அது போனவுடன், தேய்மானம் தொடங்கும்” என்று ஆடுகளத்தின் வளர்ச்சியை நன்கு அறிந்த கண்காணிப்பாளர் ஒருவர் கூறியுள்ளார். ■



# 2 பந்தில் முடிந்த ரி20 போட்டி

இங்கிலாந்தில் உள்ள தீவு அணியான ஐல் ஆஃப் மேன் அணியை 10 ஓட்டங்களில் ஆட்டமிழக்கச் செய்த ஸ்பெயின் அணி 2 பந்தில் ஆட்டத்தை முடித்து சாதனை புரிந்துள்ளது. இதன் மூலம் ரி20 போட்டிகளில் மிகவும் குறைவான ஓட்டங்கள் எடுத்த அணி என்ற மோசமான சாதனையை புரிந்துள்ளது ஐல் ஆஃப் மேன் அணி. ஐ.சி.சி ஐரோப்பிய உறுப்பினர் அணிகளான ஐல் ஆஃப் மேன் - ஸ்பெயின் அணிகளுக்கு இடையே 6 போட்டிகள் கொண்ட ரி20 தொடரில் கடைசி போட்டியில் இப்படியொரு அதிசயத்தக்க சம்பவம் நிகழ்ந்துள்ளது.



முதலில் துடுப்பெடுத்தாடிய ஐல் ஆஃப் மேன் அணி 8.4 ஓவர்களில் சகலவிக்கெற்களையும் இழந்து 10 ஓட்டங்கள் எடுத்தது. 7 வீரர்கள் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தனர். இந்த இலக்கை 2 பந்துகளில் எட்டி ஸ்பெயின் வெற்றி பெற்றது. இதன்மூலம் மிகவும் குறைவான ஓட்டங்கள் எடுத்த அணி என்ற மோசமான சாதனையை ஐல் ஆஃப் மேன் அணியும் 2 பந்தில் வெற்றி பெற்ற விரைவாக போட்டியை வென்ற அணி என்று ஸ்பெயினும் சாதனை புரிந்துள்ளது.

சமீபத்தில் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற பிக்பேஷ் லீக் தொடரில் சிட்னி தண்டர்ஸ் அணி 15 ஓட்டங்கள் அடிலெய்டு ஸ்டைக்ர்ஸ் அணிக்கு எதிராக எடுத்து மிகவும் குறைந்த ஓட்டங்கள் எடுத்த அணியாக இருந்தது. ■

# இந்திய பந்துவீச்சாளர் பும்ரா தவறவிட்ட தொடர்கள்



இந்திய அணியின் நட்சத்திர வீரர் ஜஸ்பிரித் பும்ரா காயம், அறுவைச் சிகிச்சை ஆகிய காரணங்களால் தொடர்ந்து இந்திய அணியை விட்டு விலகியிருக்கிறார். தற்போது காயத்திற்கு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள இருப்பதால் வரும் ஐ.பி.எல் தொடரில் ஆடமாட்டார் என்ற தகவல்கள் வெளியாகியுள்ளது. டெத் ஓவர் ஸ்பெலிஷ்ட் பும்ரா கடைசியாக இந்திய அணிக்காக கடந்தாண்டு செப்ரெம்பர் மாதம் ஆடினார். அதன்பின்பு, இதுவரை இந்திய அணிக்காக களமிறங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. காயம் காரணமாக பும்ரா தவறவிட்ட தொடர்களை கீழே காணலாம்.

2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் பும்ரா இங்கிலாந்து அணிக்கு எதிரான தொடரின் போது 2 ஆவது ஒருநாள் போட்டியில் முதுகுவலிக்கு ஆளானார். இதனால், 3 ஆவது ஒருநாள் போட்டியில் அவர் ஆடவில்லை.

அதே ஆண்டு ஆகஸ்ட் மாதம் வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் ஆடுவதை காயம் காரணமாக தவறவிட்டார். காயத்தில் இருந்து மீண்டு வராத காரணத்தால் ஆசிய கோப்பையில் பும்ரா இடம் பெறவில்லை. இரண்டரை மாதங்களுக்குப் பிறகு காயத்தில் இருந்து மீண்டு வந்த பும்ரா அவுஸ்திரேலிய தொடரில் திரும்பினார்.

ஆனால், அதன்பின்பும் காயம் தீவிரம் அடைந்ததால் பும்ரா ரி 20 ஒக்ரோபர் மாதம் நடைபெற்ற உலகக் கோப்பைத் தொடரில் இருந்து விலகினார். நவம்பர் மாதம் நடைபெற்ற நியூஸ்லாந்து தொடரில் பும்ரா பங்கேற்கவில்லை.

கடந்தாண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற வங்காளதேச அணிக்கு எதிரான தொடரிலும் பும்ரா ஆட முடியாத சூழல் ஏற்பட்டது.

புத்தாண்டு தொடக்கத்தில் இலங்கை அணிக்கு எதிரான தொடரில் அணிக்கு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்பட்ட பும்ரா, காயத்தில் இருந்து முழுமையாகத் திரும்பாத காரணத்தால் அவர் இலங்கை தொடரில் பங்கேற்கவில்லை.

இலங்கை தொடருக்கு பிறகு இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் வந்த நியூஸ்லாந்து அணிக்கு எதிரான தொடரிலும் பும்ரா களமிறங்கவில்லை. தற்போது நடைபெற்று வரும் அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான பார்டர் கவாஸ்கர் டெஸ்ட் தொடரிலும் பும்ரா இடம் பிடிக்க முடியாத நிலை ஏற்பட்டது.

இன்னும் காயம் குணமடையாத காரணத்தால் ஐ.பி.எல் தொடர் மற்றும் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டியிலும் பங்கேற்க மாட்டார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளது.

தொடர்ந்து காயத்தால் இந்திய அணியில் இருந்து பும்ரா விலகியிருப்பது இந்திய அணிக்கு பெரும் பின்னடைவாக உள்ளது. டெத் ஓவர்கள் ஸ்பெஷலிஸ்டான பும்ரா இல்லாததால் அவர் தவறவிட்ட போட்டிகளில் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சு தடுமாறியபோது அவரது வெற்றிடம் நன்றாகவே தெரிந்தது. தற்போது இந்திய அணியின் வேகப்பந்து வீச்சை முகமது ஷமிதான் தலைமை தாங்கி நடத்தி வருகிறார். இருப்பினும், விரைவில் பும்ரா அணிக்கு திரும்புவார் என்று ரசிகர்கள் நம்பிக்கையுடன் உள்ளனர். ■

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 04.03.2023 அன்று வெளியிடப்பட்டது.